
April 2023
தமிழ்
14 YEARS ANNIVERSARY
நற்றமிழரின் நாடித்துடிப்பு
சித்திரை
சிறப்பிதழ்


தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
TAMIL PUTHANDU VAZTHUKAL
தமிழ்
சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
வாழ்த்துக்கள்


Happy Tamil New Year
Wishing this
New Year
Illuminates.....
your life with.....
Lots of Joy,Happiness &
Success
VARSHA
தமிழ்
Happy Tamil New Year

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

April 2023 சுவடி — 13 ஓலை — 2


## வணக்கம் பல

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற பொறுப்பான பதவியில் அமர்ந்துவிட்டால், நாட்டை ஆள்பவருக்கு இணையாகவே வழிநடத்திச் செல்லும் பொறுப்பு அவருக்கும் இருக்கிறது. அந்தவகையில் பொதுவெளியில் எது பேச வேண்டும்? எது பேசக்கூடாது என்ற இலக்கணத்தை உணர்ந்து கண்ணியத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவின் எதிர்க்கட்சி உறுப்பினர் பேசிய பேச்சு நாடுமுழுதும் பேசுபொருளான அதேநேரம், அவரது பேச்சுக்குத் தரப்பட்டிருக்கும் தண்டனை என்பது நாடு முழுக்க அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் பின்னணியில் ஒளிந்திருக்கக்கூடிய அரசியல் சூழ்ச்சியில் அவர் பலிகடாவாக ஆக்கபட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. மிக நுண்ணுயிமாகக் கணக்கிட்டு பாராளுமன்ற உறுப்பினரின் பதவி பறிப்பு மட்டுமல்லாது, அவரின் அரசியல் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்குவதன் மூலம் அதிகார வரம்புமீறலைச் செய்திருக்கும் ஆளுங்கட்சியின் இப்போக்கை மக்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்! அதுவே உண்மையான ஜனநாயகம்!

உக்ரைன் மீதான் ரஷ்யாவின் போரானது, எல்லை தாண்டிய பயங்கரவாதம் போன்று நாளுக்கு நாள் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டே இருக்கிறது. ரஷ்யாவை ஒடுக்குவதற்கு இன்னும் கூடுதலான அழுத்தங்களைக் கொடுத்து கடிவாளம் போட வேண்டிய உலக நாடுகள் இன்னமும் ஏன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன எனற கேள்வி எழாமல் இல்லை!

வாடை முடிந்து கோடை தொடங்குவது போல, வாதை முடிந்து நல்ல பாதை துலங்குவதாகவே சித்திரைத் திருநாள் பிறப்பை உலகத் தமிழர்கள் கொண்டாடி மகிழ்வர். உலகெங்கும் அன்பையும் சமாதானத்தையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஒரு அவாவினை வெளிப்படுத்தும் விதமாகவே பிறக்கின்ற சித்திரைத் திருருநாளை வரவேற்போம்!

நல்ல பல ஆக்கங்களோடும், அற்புதமான கவிதைகளோடும், மருத்துவமும் மனோதத்துவமும் கலந்து கதம்ப மணம் கமழும் மலராக மலர்கின்ற 'அய் தமிழ்', சித்திரைச் சிறப்பிதழை வரவேற்று வாசியுங்கள்!... நேசியுங்கள்!... உலகத் தமிழர் அனைவருக்கும் உவப்பான சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




தெளியுமா பித்தம்!

ஏறிய வெறி!

தமிழே தமிழே

ராஜ குரு!

சேரமான் கனவு

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

யோக யாகம்!

மருத்துவ தமிழ்

தடம் புரியா தலைமுறை



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது



# தெளியுமா

ராகுல்காந்திக்கு எதிரான அவதூறு வழக்கில் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு வெளியான மறுநாளே அவரது எம்.பி. பதவியைப் பறித்து மக்களவைச் செயலகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் இருந்து மக்களவைக்கு தேர்வான ராகுல்காந்தியின் எம்.பி. பதவி தகுதி நீக்கம் செய்யப்படுகிறது, நீதிமன்ற தீர்ப்பு வெளியான மார்ச் 23—ம் தேதி முதலே இது அமலுக்கு வருகிறது என்று அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 1951—ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு 102(1)—ன் படி இந்த தகுதிநீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோசடி குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற நீரவ் மோதி, லலித் மோதி உள்ளிட்ட சிலர் குறித்துப் பேசும் போது மோதி என்ற பின்னொட்டை குறிப்பிட்டு அவர் முன்வைத்த விமர்சனம் தொடர்பாக 2019—ம் ஆண்டு இந்த அவதூறு வழக்கு தொடரப்பட்டது. 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை எதிரொலியாக பதவியிழந்த எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் பலர் உண்டு. ஆனால், அவதூறு வழக்கிற்காக ஒருவரது எம்.பி. பதவி பறிக்கப்படுவது இதுவே முதல் முறை.



## ஜெயலலிதா தகுதி நீக்கம்

2014—ம் ஆண்டு செப்டம்பர் 27—ம் தேதி சொத்துக்குவிப்பு வழக்கில் அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, முதலமைச்சர் பதவியில் இருந்து உடனே அவர் விலக நேரிட்டது.

அந்த ஆண்டு நவம்பர் 8—ம் தேதி ஜெயலலிதாவின் எம்.எல்.ஏ. பதவியைப் பறித்து அப்போதைய தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் தனபால் அறிவிப்பு வெளியிட்டார். ஜெயலிலதாவின் எம்.எல்.ஏ. பதவி தீர்ப்பு வெளியான நாள் முதலே ரத்தாகிவிட்டதாக அவர் அந்த அறிவிக்கையில் குறிப்பிட்டிருந்தார். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்—1951, பிரிவு 8—ன் படி தண்டனைக் காலம்





# பீத்தம் ?

முடிவடைந்த பிறகு அடுத்து வரும் 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## குல்தீப் சிங் செங்கார் பதவி பறிப்பு

உத்தரபிரதேச மாநிலம் பங்கார்மாவ் தொகுதியில் இருந்து பா.ஜ.க. சார்பில் சட்டப்பேரவைக்குத் தேர்வான குல்தீப் சிங் செங்காருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்து டெல்லியின் தீஸ் ஹசாரி நீதிமன்றம் 2019—ம் ஆண்டு டிசம்பர் 20—ம் தேதி தீர்ப்பளித்தது. நீதிமன்ற தீர்ப்பு வெளியாகி 2 மாதங்கள் கழித்த பிறகே, 2020ம் ஆண்டு பிப்ரவரி 25—ம் தேதியன்று அவரை தகுதிநீக்கம் செய்து உத்தரபிரதேச சட்டமன்ற செயலகம் அறிவிப்பு வெளியிட்டது.

திரும்பப் பெற்ற நிகழ்வும் நடந்தேறியுள்ளது. இதனால்தான், ஹரியாணா மாநிலம் கல்கா தொகுதியில் இருந்து சட்டப்பேரவைக்குத் தேர்வான காங்கிரஸ் எம்.எல்.ஏ. பிரதீப் சவுத்ரி குறித்து பேசுவது அவசியமாகிறது.

ஹிமாச்சல் பிரதேச மாநிலம் பட்டி நகர நீதிமன்றத்தால் 2021ம் ஆண்டு ஜனவரி 28—ம் தேதி பிரதீப் சவுத்ரிக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2011—ம் ஆண்டு இளைஞர் உயிரிழப்பைத் தொடர்ந்து பட்டி சௌக் முற்றுகை,







## தகுதிநீக்கம் ரத்தாகியுள்ளதா? வரலாறு என்ன சொல்கிறது?

குற்ற வழக்கில் சிறைத் தண்டனை பெற்றதால் பதவி பறிக்கப்பட்ட எம்.எல்.ஏ. ஒருவர் பதவியை

அரசுப் பணிகளை தடுத்தல் ஆகிய புகார்களில் அவரை குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்தது. நீதிமன்ற தீர்ப்பு வெளியான 2 நாட்களுக்குப் பிறகு அவரை தகுதிநீக்கம் செய்து ஹரியாணா சட்டமன்றம் அறிவிக்கை வெளியிட்டது. இமாச்சல

பிரதேச உயர்நீதிமன்றத்தில் பிரதீப் குமார் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கில் அவருக்கு விதிக்கப்பட்ட தீர்ப்புக்கு ஏப்ரல் 19—ம் தேதி நீதிபதிகள் தடை விதித்தனர்.#அதே ஆண்டு மே 20—ம் தேதி தகுதி நீக்கத்தை ரத்து செய்து பிரதீப்




சவுத்ரியை மீண்டும் எம்.எல்.ஏ.வாக அங்கீகரித்து ஹரியாணா சட்டமன்ற சபாநாயகர் ஞான் குப்தா அறிவிப்பு வெளியிட்டார்.

பிரதீப் சவுத்ரியின் மகன் அமன் சவுத்ரி, “என்னுடைய தந்தைக்கு விதிக்கப்பட்ட தீர்ப்புக்கு உயர்நீதிமன்றம் ஏப்ரல் மாதமே தடை விதித்துவிட்டது. அதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகே ஹரியாணா சபாநாயகர் அவரது தகுதிநீக்கத்தை ரத்து செய்தார்” என்று கூறினார்.

## தகுதிநீக்க ரத்துக்காக காத்திருக்கும் தேசியவாத காங்கிரஸ் எம்.பி.

ஹரியாணாவில் கல்கா தொகுதி எம்.எல்.ஏ. பிரதீப் சவுத்ரிக்கு அவரது பதவி திரும்பக் கிடைத்துவிட்டது. ஆனால், லட்சத்தீவு தொகுதியில் இருந்து தேசியவாத காங்கிரஸ் சார்பில் மக்களவைக்கு தேர்வான முகமது ஃபைசல் அவரது பதவியைத் திரும்பப் பெற இன்னும் காத்திருக்கிறார்.

கடந்த ஜனவரி 11—ம் தேதி, கொலை முயற்சி வழக்கு ஒன்றில் அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து லட்சத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 2 நாட்கள் கழித்து அவரது எம்.பி. பதவியைப் பறித்து மக்களவை செயலகம் அறிவிக்கை வெளியிட்டது. முகமது ஃபைசலுக்கு விதிக்கப்பட்ட 10 ஆண்டு சிறைத் தண்டனைக்கு கேரள உயர் நீதிமன்றம் ஜனவரி 25—ம் தேதியன்று தடை விதித்தது. அவரை மீண்டும் மக்களவை உறுப்பினராக அங்கீகரிக்க மத்திய சட்ட அமைச்சகம் பரிந்துரைத்திருக்கிறது, ஆனால் இன்னும் அது நடைமுறைக்கு வரவில்லை.



அரசியல் சட்டப்பிரிவு 102(1) மற்றும் 191(1) இன் படி, நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற உறுப்பினர், லாபம் தரும் பதவியில் இருந்தாலோ, மனநலம் குன்றியவராக இருந்தாலோ, திவாலாக இருந்தாலோ அல்லது சட்டப்பூர்வ இந்தியக் குடிமகன் அல்லாதவராக இருந்தாலோ தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

தகுதி நீக்கத்தின் இரண்டாவது விதி அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணையில் உள்ளது. கட்சி மாறுவதன் அடிப்படையில் உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்வதற்கான விதிகள் இதில் உள்ளன.இது தவிர, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்—1951ன் கீழ், எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. தனது உறுப்பினர் பதவியை இழக்கலாம். இந்த சட்டத்தின் மூலம் குற்ற வழக்குகளில் தண்டனை பெற்ற எம்.பி., எம்.எல்.ஏ.க்களின் உறுப்பினர் பதவியை ரத்து செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 இன் பிரிவு 8(3) இன் கீழ், ஒருவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால், அவர் மக்களவை அல்லது சட்டமன்ற உறுப்பினராகத் தொடரும் தகுதியை இழக்கிறார்.எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் மற்றும் பதவியை மீண்டும் திரும்பப் பெறுவது போன்றவற்றில் இறுதி




முடிவு அவைத் தலைவர் வசமே இருக்கிறது.

## நடந்தது என்ன?

4 ஆண்டுகள் முன்பு தொடரப்பட்ட அவதூறு வழக்கில் காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் தீர்ப்பளித்த அடுத்த நாளிலேயே அவரை எம்பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்து மக்களவை செயலகம் உத்தரவிட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 102 (1) மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 இன் கீழ் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ராகுல் காந்தியின் பேச்சிற்காக அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்த சூரத் நீதிமன்றம், 15,000 ரூபாய் அபராதமும் விதித்தது. எனினும், அவருக்கு உடனடியாக ஜாமீன் வழங்கப்பட்டது. நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ராகுல் காந்திக்கு 30 நாட்கள் அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

## என்ன பேசினார் ராகுல் காந்தி?

இந்த வழக்கு, 2019ஆம் ஆண்டு மோதி என்ற குடும்பப் பெயர் பற்றி ராகுல் காந்தி தெரிவித்த கருத்துடன் தொடர்புடையது.2019ஆம் ஆண்டு மக்களவை தேர்தலையொட்டி கர்நாடகாவின் கோலாரில் ராகுல் பிரசாரம் செய்தார். அப்போது, தன்னுடைய பேச்சில் “எப்படி திருடர்கள் அனைவருக்கும் மோதி என்ற குடும்ப பெயர் இருக்கிறது” என்று நீரவ் மோதி, லலித் மோதி போன்றோரை குறிப்பிட்டு ராகுல் கருத்து தெரிவித்திருந்தார்.




இதையடுத்து, பாஜகவைச் சேர்ந்த புர்னேஷ் மோதி என்பவர் ராகுல் காந்திக்கு எதிராக அவதூறு வழக்கு தொடர்ந்தார். வழக்கறிஞரான புர்னேஷ் மோதி சூரத் மேற்கு தொகுதி எம்.எல்.ஏ. வாகவும் உள்ளார். பூபேந்திர படேல் அரசில் அமைச்சராகவும் இருந்தவர் அவர். ராகுல் தெரிவித்த கருத்து மொத்த மோதி சமூகத்தையும் அவதூறு செய்வதாக புர்னேஷ் மோதி தெரிவித்திருந்தார். இந்த வழக்கின் விசாரணை சூரத் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்திய குற்றவியல் சட்டத்தின் பிரிவு 499, 500 ஆகியவற்றின் கீழ் ராகுல் காந்தி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்திய தண்டனைச் சட்டத்தின் 499வது பிரிவு, குற்றவியல் அவதூறு வழக்குகளில் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையை வழங்க வழிவகுக்கிறது.ராகுல் காந்திக்கான தண்டனை விவரம் அறிவிக்கப்பட்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்த புர்னேஷ் மோதி, `இந்த முடிவை நாங்கள் மனதார வரவேற்கிறோம். 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறதா என்பது கேள்வியல்ல. இது சமூகம் தொடர்பானது. எந்த சமூகத்துக்கும், சாதிக்கும் வேறு எதற்கு எதிராகவும்




கருத்து தெரிவிக்கக் கூடாது. பிறவற்றை எங்கள் சமூகத்துடன் இணைந்துபேசி முடிவு செய்வோம்' என்று குறிப்பிட்டார்.

விசாரணையின்போது, எந்த சமூகத்தையும் தனது பேச்சு மூலம் புண்படுத்த விரும்பவில்லை என்று ராகுல் காந்தி கூறியதாக பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவரது வழக்கறிஞர்கள் குழு தெரிவித்தது.

## ராகுல் காந்தியின் எம்பி பதவி பறிக்கப்பட்டது ஏன்?

சட்டப்பிரிவு 102(1) மற்றும் 191(1) இன் படி, நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற உறுப்பினர் ஏதேனும் லாபம் ஈட்டும் பதவியை வகித்தால், மனநிலை சரியில்லாதவராக இருந்தால், திவாலானவராக அல்லது சட்டப்பூர்வ இந்திய குடிமகனாக இல்லாவிட்டால், அவரது உறுப்பினர் பதவி ரத்து செய்யப்படுகிறது.

தகுதி நீக்கம் செய்வதற்கான 2வது விதி, அரசியலமைப்புசட்டத்தின் 10வது அட்டவணையில் உள்ளது. கட்சித் தாவல் அடிப்படையில் உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்வதற்கான விதிகள் இதில் உள்ளன. இது தவிர, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951ன் கீழ், எம்பி அல்லது எம்எல்ஏ உறுப்பினர் பதவியை இழக்கலாம். இந்த சட்டத்தின் மூலம் குற்ற வழக்குகளில் தண்டனை பெற்ற எம்பி, எம்எல்ஏக்களின் உறுப்பினர் பதவியை ரத்து செய்ய வழிவகை உள்ளது.



மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 8(1)ன்படி, இரு குழுக்களிடையே பகைமையை வளர்த்ததற்காகவோ, லஞ்சம் வாங்கியதற்காகவோ அல்லது தேர்தலில் தனது செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்தியதற்காகவோ ஒரு உறுப்பினரை தகுதி நீக்கம் செய்யலாம்.உத்தரபிரதேச மாநிலம் ராம்பூர் தொகுதி எம்.எல்.ஏ., ஆசம் கான், வெறுப்பு பேச்சு வழக்கில் நீதிமன்றத்தால் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றதால், அக்டோபர் 2022ல் அவரது உறுப்பினர் பதவி ரத்து செய்யப்பட்டது. வெறுப்பு பேச்சு காரணமாக, இந்த வழக்கு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951 இன் பிரிவு 8(1) இன் கீழ் வருகிறது.

## எனினும் அவதூறுகள் இதன் கீழ் வராது.

பிரிவு 8 (2) இன் கீழ், பதுக்கல், லாபம் ஈட்டுதல், உணவு மற்றும் பானங்களில் கலப்படம் செய்தல் அல்லது வரதட்சணைத் தடைச் சட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால் ஒருவரது பதவி ரத்து செய்யப்படும்.பிரிவு 8 (3)ன் கீழ், ஒருவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால், அவர் உறுப்பினர் பதவியில் இருப்பதற்கான தகுதியை இழக்கிறார். இந்த விவகாரத்தில் சபாநாயகரின் முடிவு இறுதியானது.

இந்த குற்றவியல் அவதூறு வழக்கில் சூரத் நீதிமன்றம் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது மற்றும் பிரிவு



8(3) இன் கீழ் அவரது உறுப்பினர் பதவி ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த விதியின்படி, அந்த எம்.பி அல்லது எம்.எல்.ஏ குற்றம் நிரூபிக்கப்பட்ட நாளிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார். அவர் விடுதலையான பின்பும் தேர்தலில் போட்டியிட 6 ஆண்டுகள் தடை விதிக்கப்படும். அதாவது இரண்டு ஆண்டுகளுக்கும், அதன் பிறகு ஆறு ஆண்டுகளுக்கும் ராகுல் காந்தி தேர்தலில் போட்டியிட முடியாது.

கடந்த 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பிரகடனம் செய்த அவசர சட்டம் ஒன்றை ஆபத்தானது என்றும், அதை கிழித்தெறிய வேண்டும் என்றும் ராகுல் காந்தி கூறினார். அன்று ராகுல் எதிர்த்த தமது சொந்த அரசாங்கத்தின் அவசர சட்டம் முழுமையான சட்டமாக நாடாளுமன்றத்தால் ஏற்கப்பட்டிருந்தால், அந்த சட்டம் ராகுலின் பதவியைக் காப்பாற்றி இருக்கும்.

அப்போது, நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டாலும், சில நிபந்தனைகளின் கீழ் எம்பி, எம்எல்ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்தது. அப்போது காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக ராகுல் காந்தி இருந்தார். அப்போது அவர், 'கறை படிந்த எம்பிக்கள் மற்றும் எம்எல்ஏக்கள்' மீதான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் அவசரச் சட்டம் அபத்தமானது என்றும், அதை கிழித்து எறிய வேண்டும் என்றும் கூறினார்.

இந்நாட்டில் உள்ள மக்கள் நிஜமாகவே ஊழலுக்கு எதிராக போராட விரும்பினால், இதுபோன்ற சிறு சிறு சமரசங்களை நாம் மேற்கொள்ளக் கூடாது. சிறிய ஒப்பந்தம் போட்டால் எல்லாவிதமான ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளத் தொடங்குகிறோம் என்று ராகுல் காந்தி தெரிவித்திருந்தார்.




## இதற்கு முன்பு தகுதி நீக்கம் செய்யப்பட்ட தலைவர்கள் யார் யார்?

லட்சத்தீவு எம்.பியாக இருந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முகமது பைசல் தனது உறவினரான முகமது சாஹில் மீது தாக்குதல் நடத்தியதாக வழக்கு தொடரப்பட்டது. 5 ஆண்டுகள் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையின் முடிவில் முகமது பைசல் குற்றவாளி என்று தீர்ப்பளித்த நீதிமன்றம் அவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து ஜனவரி 11, 2023 அன்று தீர்ப்பளித்தது. இதையடுத்து தனது எம்பி பதவியை அவர் இழந்தார்.

இந்தியாவில் முதன்முதலில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஷீத் மசூத். 1990ஆம் ஆண்டு வி.பி.சிங் தலைமையிலான மத்திய அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக ரஷீத் மசூத் பதவி வகித்தார். அப்போது திரிபுரா மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான மத்திய அரசின் இடங்களில் தகுதியில்லாத மாணவர்கள் சேர்ந்து




படிக்க அவர் முறைகேடாக அனுமதி அளித்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பான வழக்கில் அவர் குற்றவாளி என்று கடந்த 2013ஆம் ஆண்டு சிபிஐ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவராக இருந்த லாலு பிரசாத் யாதவ் பிகார் முதலமைச்சர், மத்திய அமைச்சர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். பிகார் மாநிலத்தை உலுக்கிய மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் லாலு பிரசாத் யாதவ் குற்றவாளி என்று சிபிஐ சிறப்பு நீதிமன்றம் 2013ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி தீர்ப்பளித்தது. அப்போது பிகாரில் உள்ள சரண் தொகுதி எம்.பி.யாக அவர் இருந்தார். நீதிமன்ற தீர்ப்பையடுத்து மக்களவை உறுப்பினர் பதவியில் இருந்து லாலு பிரசாத் யாதவ் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

ஐக்கிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த ஜெகதீஷ் சர்மாவும் கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டதால், 2013—ஆம் ஆண்டு மக்களவை உறுப்பினர் பதவியை அவரும் இழக்க நேரிட்டது. அப்போது பிகாரின் ஜெகனாபாத் தொகுதி எம்.பி ஆக அவர் இருந்தார். 1991—96 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு தொடரப்பட்டது. செப்டம்பர் 27, 2014ல் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி மைக்கல் டி குன்ஹா ஜெயலலிதா குற்றவாளி என்று அறிவித்தார். இதையடுத்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.



உத்தர பிரதேசத்தின் முசாஃபர் நகரில் கடந்த 2013ஆம் ஆண்டு இந்துக்கள் — இஸ்லாமியர்களிடையே ஏற்பட்ட கலவரத்தில் 62 பேர் உயிரிழந்தனர். இந்த கலவரம் தொடர்பாக பாஜக எம்எல்ஏ ஆக இருந்த விக்ரம் சைனி மீது வழக்குப் பதியப்பட்டது. எம்எல்ஏ, எம்பி மீதான குற்ற வழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்தது. முசாஃபர் நகர் கலவர வழக்கில் விக்ரம் சைனி குற்றவாளி என்றும் அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தும் கடந்த 2022 அக்டோபர் மாதம் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து விக்ரம் சைனியின் தொகுதி காலியாக இருப்பதாக உத்தரப்பிரதேச சட்டமன்றம் நவம்பர் 7, 2022 தேதியிட்ட அறிவிப்பை வெளியிட்டது.

உத்தர பிரதேச மாநிலம் ராம்பூர் எம்.எல்.ஏ.வாக இருந்த ஆசம் கான் 2019ல் யோகி ஆதித்யநாத் மற்றும் பிற பாஜக தலைவர்கள் குறித்து அவதூறாக பேசியதாக வழக்கு தொடரப்பட்டது.அக்டோபர் 27, 2022 அன்று, கூடுதல் தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட் நிஷாந்த் மான் , சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த ஆசம் கான் மீது தொடரப்பட்ட வழக்கில் அவரை குற்றவாளி என தீர்ப்பளித்தார்.

அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. அடுத்த நாள், உத்தரப் பிரதேச சட்டமன்றச் செயலகம் ஆசம் கானை சபையில் இருந்து தகுதி நீக்கம் செய்வதாக அறிவித்தது. ஆசம் கான் மற்றும் அவரது மகன் அப்துல்லா ஆசாம் ஆகியோர் 2008ஆம் ஆண்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டது தொடர்பாக அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் தடுத்தல் ஆகிய பிரிவுகளில் கீழ் இருவர் மீதும் வழக்கு தொடரப்பட்டது.

15 ஆண்டுகள் கழித்து பிப்ரவரி 2023ல் இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. இருவரும் குற்றவாளிகள் என்றும் அப்துல்லா ஆசாமுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தும் மொராதாபாத் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, எம்.எல்.ஏ பதவியில் இருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"நாட்டுக்காக எந்த விலையையும் கொடுப்பேன்!"

**ராகுல் காந்தி**

(இப்படிப் பேசற ஒரு தலைவரை இங்கே பார்க்கிறதே ஆச்சரியமா இருக்கு!)



"பிரதமர் நரேந்திர மோடியின் புதிய இந்தியாவில் எதிர்க்கட்சித் தலைவர்கள்தான் முதன்மையான இலக்கு! "

**மம்தா பானர்ஜி**

(எத்தனை விக்கெட் விழுந்தாலும் பரவாயில்லைன்னு நின்னு ஆடறீங்க! ஆட்டம் அபாரம்!)



"திருடரை திருடர் என்றழைப்பது நம் நாட்டில் கிரிமினல் குற்றமாக இருக்கிறது. இங்கே அனைத்து அரசு இயந்திரங்களும் அழுத்தத்தில் இருக்கின்றன."

**உத்தவ் தாக்கரே**

(ஒரு காலத்தில் கூட்டாளியாய் இருந்தாலும், இப்படி உண்மையைப் பேசற துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும்!)



"எம்.ஜி.ஆர் வகுத்த விதிகளை மாற்ற துடிக்கும் இபிஎஸ், ஆணவம், பணத்திமிரால் பலவீனம் அடையும் அதிமுக!"

**டிடிவி தினகரன்**

(இதைச் சொல்றதுக்கு நமக்கு என்ன யோக்யதை இருக்குன்னு கொஞ்சமாவது யோசிக்க வேணாம்!?)




## யுக்ரேனில் ஜப்பான் பிரதமர்– ரஷ்யாவில் சீன அதிபர்

**யு**க்ரேன் போர் ஆசியாவில் எப்படி எதிரொலிக்கிறது என்பதை நீங்கள் அறிய விரும்பினால், ஜப்பான் மற்றும் சீன தலைவர்களின் பயணம் உங்களுக்கு ஒரு சிறந்த உதாரணத்தை வழங்கக்கூடும். போரில் எதிரெதிர் பக்கங்களில் உள்ள நாடுகளுக்கான பயணத்தில் இந்த நாடுகளின் தலைவர்கள் உள்ளனர்.

யுக்ரேன் தலைநகர் கியவ் சென்றுள்ள ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா புனரமைப்பு, மனிதாபிமான உதவிகள் தொடர்பாக யுக்ரேன் அதிபருக்கு உறுதியான ஆதரவை தெரிவித்துள்ளார்.

மறுபுறம், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் நண்பர் என்றும் கூட்டாளி என்றும் கருதப்படும் சீன அதிபர் ஷி ஜின்பின் தற்போது மாஸ்கோவில் உள்ளார். தன்னை நடுநிலையாளர் என்று சீனா கூறிகொண்டாலும், ரஷ்யா சார்புடையதாகவே அந்நாடு தெரிகிறது.

ரஷ்யாவுடனான தனது உறவுகளுக்கு சீனா முன்னுரிமை அளிக்கும் என்று செவ்வாயன்று கூறிய ஷி ஜின்பிங், இரு நாடுகளையும் சக்திவாய்ந்த அண்டை நாடுகள் என்றும் விவரித்தார்.

சூழல், நேரம் ஆகியவற்றின் அடிப்படையில், ஜப்பான் பிரதமர் கிஷிடாவின் யுக்ரேன் பயணமும் குறிப்பிடத்தக்கது ஆகும். இதில் நாம் என்ன புரிந்துகொள்ள முடியும்?

ஜப்பானிய தலைவர் ஒருவர் அறிவிக்கப்படாத வெளிநாட்டு பயணம் மேற்கொள்வது என்பது அரிதானது. அதிலும், இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் போரில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டுக்கு செல்லும் முதல் ஜப்பானிய பிரதமர் கிஷிடா தான். அவர் புறப்படுவதற்கு முன்புவரை அவரது பயணம் குறித்த தகவல் ரகசியமாகவே வைக்கப்பட்டது. பாதுகாப்பு காரணங்களுக்காக அவரது பயணத் தகவல் ரகசியமாக வைக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த பயணத்தின் போது, அருகில் உள்ள புச்சா நகருக்கு கிஷிடா அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு கடந்த ஆண்டு ரஷ்யப் படைகளால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள்








கொல்லப்பட்டனர். அங்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அவர், அப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியத்தின் மீது மிகுந்த கோபம் கொள்வதாகக் கூறி ஆறுதல் கூறினார்.

இந்த பயணத்திற்கு முன்னதாக, ஜப்பானிய வெளியுறவு அமைச்சகம், “தங்கள் தாய்நாட்டைக் காக்க எழுந்து நிற்கும் யுக்ரேனிய மக்களின் தைரியம், பொறுமைக்கு மதிப்பளிப்பதாகவும் அசைக்க முடியாத ஆதரவை வழங்குவதாகவும்“ கூறியது.

‘படையெடுப்பு, வலுகட்டாயமாக ரஷ்யா மேற்கொண்டுள்ள ஒருதலைப்பட்சமான மாற்றத்தை கிஷிடா முற்றிலும் நிராகரிப்பார்’ என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யுக்ரேனுக்கு கிஷிடா பயணம் செல்ல வேண்டும் என்று அவரது சொந்த கட்சியான ஆளும்

## ஷப்மா காலில் & கரித் இவன்ஸ்

லிபரல் டெமாக்ரடிக் கட்சியில் இருந்து அழுத்தம் வந்தது. யுக்ரேன் மீது ரஷ்யா படையெடுப்பை தொடங்கிய பின், அங்கு பல்வேறு நாட்டு தலைவர்களும் சென்றனர். அங்கு செல்லாத ஒரே ஜி7 நாட்டு தலைவராக கிஷிடா இருந்தார். எனவே, ஹிரோஷிமாவில் மே மாதம் நடைபெறும் ஜி7 உச்சி மாநாட்டிற்கு தலைமை தாங்குவதற்கு முன்பாக அவர் யுக்ரேன் செல்ல வேண்டும் என்று குரல்கள் எழுந்தன.





கடந்த வாரம் டோக்கியோவில் தென்



கொரிய அதிபருடன் ஒரு உச்சி மாநாட்டை நடத்தியதன் மூலம் ஏற்கனவே அவர் ஒரு ராஜதந்திர நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். தென் கொரியா— ஜப்பான் இடையேயான இந்த பேச்சுவார்த்தை பல ஆண்டுகளுக்கு பின் நடைபெற்றுள்ளது.

தென் கொரியாவுடன் உறவுகளை இயல்பாக்குவது, உளவுத்துறையைப் பகிர்வது மற்றும் வட கொரியாவுக்கு எதிராக ஒன்றிணைந்த கூட்டணியை காட்டுவது போன்றவை ஜப்பானின் நட்பு தொடர்பாக அமெரிக்காவுக்கு உறுதியளிக்கும்.




ஜப்பான் பிரதமரின் யுக்ரேன் பயணம் வாஷிங்டனால் வரவேற்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. சீனத் தலைவரின் மாஸ்கோ பயணத்தின் ஒரு பகுதி, நாட்டின் உலகளாவிய செல்வாக்கை விரிவுபடுத்தும் முயற்சியாகும். அதே நேரத்தில் யுக்ரைனில் ஜப்பான் தலைவர் இருப்பது, இந்த புவிசார் அரசியல் கொந்தளிப்புக்குள் அவர்கள் எங்கு நிற்கிறார்கள் என்பதற்கு வலுவான செய்தியை அனுப்புகிறது.



### யுக்ரேன் ரஷ்யா போர்

இது சாதாரண சாதனையல்ல. குறிப்பாக சீனாவுடனான அதன் உறவில் ஜப்பானுக்கு நிறைய சமநிலை உள்ளது. கடந்த மாதம், டோக்கியோவில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக இரு நாடுகளும் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை நடத்தியது. ஜப்பானின் ராணுவக் கட்டமைப்பினால் கவலையடைந்துள்ளதாக சீனா கூறியது. ரஷ்யாவுடனான சீனாவின் ராணுவ உறவு, உளவு பலூன்களை பயன்படுத்துவது ஆகியவற்றை ஜப்பானும் விமர்சித்தது.

உலகின் இரண்டாவது, மூன்றாவது பெரிய பொருளாதார நாடுகளாக சீனா, ஜப்பான் உள்ளன. அவர்களுக்கு மத்தியில் உள்ள தற்போதைய பதற்றங்களுக்கு இடையே ஒரு திறந்த தொடர்பு ஒட்டம் அவசியம்.

யுக்ரேனில் நடைபெறும் போர் தொடர்பாக ஜப்பானுக்கும் அதன் சொந்த கவலைகள் உள்ளன. யுக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கும் தைவானுக்கு எதிரான சீனாவின் ராணுவ ஆக்கிரமிப்புக்கும் இடையேயான சாத்தியமான ஒற்றுமை குறித்த ஆழ்ந்த கவலை ஜப்பானுக்கு உள்ளது.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix • இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

கவிதை

# யோகமே தேகவாழ்வை உய்விக்கும் !



வாழ்வெனும் கடுநெடும் பயணத்திலே
வாழ்வென்ப தெல்லாம் வாழ்வாமோ?
வாழ்தல் குறித்த வினாக்களுடனே
வாழ்வுதினம் நகர்கிற தெனினும்
வாழ்வுதனை வாழ்வாக மாற்றிடும்
வாழ்நாள்தான் வாய்ப்ப தெந்நாளோ?

தேகமிது தேக்கென்றும் தேனென்றும்
தேகத்தைக் கொண்டாடல் காண்மின்!
தேகம் மட்டுமே தேர்போலுலாவல்
தேகத்துக் கழகாகிடுமோ கேண்மின்!
தேகமே சந்தேகமென்றான பின்னே
தேகமிங் கெடுத்திட்ட பயனென்கொல்?

யோகம் வேண்டும் வேண்டுமென்றே
யோகம் தேடியோடு வாரறிவாரோ?
யோகவுடலே ஆன்மாவின் கோயிலாம்!
யோகம் பெறவேயிங் கோகஞ்செய்மின்!
யோகமே உயர்மாயம் செய்விக்கும்!
யோகமே தேகவாழ்வை உய்விக்கும்!

**கொற்றவன்**


தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
TAMIL PUTHANDU VAZTHUKAL
மலர்ந்திருக்கு
தமிழ்
சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
வாழ்த்துக்கள்


கட்டுரை




## சிதிலமடைந்த வரலாற்று எச்சங்கள்!

ஹம்பி உயிரோட்டமான வரலாற்று பூமி. விஜயநகரப் பேரரசின் எச்சங்களை சரியாகப் பாதுகாத்து பராமரித்து இருக்க வேண்டும். ஆனால் சரியான பராமரிப்பு இல்லாததோடு, மக்கள் மத்தியில் அது தொடர்பான ஆர்வம் ஏற்படுகிற சூழலும் இல்லாதது வேதனையிலும் வேதனை.

முதலாம் ஹரிஹரன், முதலாம் புக்கன், இரண்டாம் ஹரிஹரன் ஆகிய மூன்று அரசர்கள் காலத்தில் விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. அது வடமேற்கில் துங்கபத்திரா நதிக்கரை வரையும், வடக்கே கிருஷ்ணா நதிக்கரை வரையும், தெற்கே திருநெல்வேலி வரையும் பரவியிருந்தது என்பது






வரலாறு. விஜயநகரப் பேரரசர்கள் தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் ஆதரித்திருக்கிறார்கள். அந்த அவையில் அல்லாசானி பெத்தண்ணா, தெனாலி ராமன் போன்றவர்களும் இடம் பெற்றனர். ஆண்டாளின் திருப்பாவையை தெலுங்கில் கிருஷ்ணதேவ ராயர் ‘ஆமுக்த மால்யதா’ என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார் என்றால், அவர் தமிழில் தேர்ச்சி பெற்றவராகத்தானே இருந்திருக்க வேண்டும்?

‘தமிழகத்தில் இன்றைக்கு இருக்கின்ற காசி — கன்னியாகுமரி நெடுஞ்சாலை, கன்னியாகுமரியில் இருந்து திருச்செந்தூர், ராமேசுவரம், தஞ்சாவூர், சிதம்பரம், செஞ்சி வரை உள்ள சாலைகள் அக்காலத்தில் யானைப்படை, குதிரைப் படைகள் செல்வதற்காக கிருஷ்ணதேவராயரால் அமைக்கப்பட்ட சாலைகளாகும். அவையே இன்றைக்கு நம்முடைய போக்குவரத்துக்கு பயன்படுகின்றன’ என்று எழுத்தாளர் ரா.கி. ரங்கராஜன் தனது நூலில் குறிப்பிட்டு இருக்கிறார்.

சோழ அரசர்கள் ஆந்திரத்தில் திருமண உறவு கொண்டிருந்ததாக வரலாற்றுச் செய்திகள் உள்ளன. சோழ, பாண்டிய மன்னர்களுக்கு நெருக்கமாகவே



இருந்ததுதான் ஆந்திர மண். விஜயநகரப் பேரரசு தோன்றுவதற்கும் அது வலிமை பெறுவதற்கும் அடிப்படைக் காரணமாக அதற்கு முன்பு நாட்டில் நிலவிய சூழ்நிலை இருந்திருக்கிறது. கி.பி. 1296—ஆம் ஆண்டு, அலாவுதீன் கில்ஜி தேவகிரியின் மீது படையெடுத்து, இராமச்சந்திர தேவனுடைய செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்தார். பின்னர் தில்லி சுல்தானாகப் பதவி ஏற்றார். அலாவுதீன் கில்ஜியால் முதலில் தொடங்கப்பட்டு முகம்மது பின் துக்ளக் ஆட்சிக்காலம் வரை நடைபெற்ற படையெடுப்புகளால், தென்னிந்தியக் கோயில்களும்,மடங்களும் கொள்ளையடிக்கப்பட்டு அவற்றில் இருந்த விலை உயர்ந்த செல்வங்களும் கலைப்பொருள்களும் வடஇந்தியாவிற்கு யானைகள், ஒட்டகங்கள், குதிரைகளின் மீது ஏற்றி அனுப்பப்பட்டிருக்கின்றன.

**கே.எஸ்.இராதாகிருஷ்ணன்**

இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி அமைப்பதற்கு ஒரு புதிய சைவ சமய இயக்கம் ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் தோன்றியது. இவ்வியக்கத்திற்கு, புரோலைய நாயக்கர், காப்பைய நாயக்கர் ஆகிய இருவரும்தலைமையேற்றனர். தென்னிந்திய வரலாற்றில் 1336—ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்ற விஜயநகரப் பேரரசு தென்னிந்திய சமயங்கள், கோயில்கள்ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டதென வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.








1336—ஆம் ஆண்டில் விஜயநகர சாம்ராஜ்யம் அமைக்கப்பட்டது. கி.பி. 1336 முதல் 1646 வரை ஆட்சியில் இருந்தது விஜயநகரப் பேரரசு. சங்கம, சாளுவ,துளுவ, அரவீடு என வெவ்வேறு மரபுகளைச் சார்ந்தவர்களால் ஆளப்பட்டது. அன்றைய விஜயநகரத்தில் நகை சந்தை, மலர் சந்தை, காய்கறி சந்தை, பட்டு சந்தை என்ற பல சந்தைகளும், நீச்சல் குளங்களும் யானை, குதிரைகளைக் கட்டி வைக்க கட்டடங்களும், அறிஞர்கள் ஆய்வு நடத்த கூடங்களும் இருந்திருக்கின்றன. அது மட்டுமல்ல, நகருக்குள் நுழையும்முன்னே சுங்கச்சாவடியும் இருந்திருக்கிறது. வைத்திய சாலைகள் நிரம்பிய நகரமாகவும் விஜயநகரம் இருந்திருக்கிறது.

துங்கபத்திரா நதியின் குறுக்கே பெரிய அணைக்கட்டு கட்டப்பட்டு அந்நதியின் நீர் ஒரு பெரிய சமுத்திரம் போன்று ஹொஸ்பெட் என்ற ஊரில் தேங்கியுள்ளது. ஹொஸ்பெட்டிற்குக் கிழக்கே ஐந்து மைல் தூரத்தில் விஜய நகரத்தின் அழிவுச் சின்னங்கள் துங்கபத்திரா நதியின் தென்கரையிலுள்ள ஹம்பி என்னுமிடத்தில் காணப்படுகின்றன. புகழ்பெற்ற விஜயநகரப் பேரரசின் தலைநகரான விஜயநகரம் ஹம்பிக்கு அருகில்தான் இருந்திருக்கிறது. துங்கபத்திரா ஆறு, விஜயநகரத்துக்கு இயற்கை அரணாக இருந்திருக்கிறது. சுற்றிலும் குன்றுகள் இருந்திருக்கின்றன. எதிரிப் படைகள் வேகமாக முன்னேற முடியாமல் தடுக்கும் கரடுமுரடான நிலப்பகுதிகள் அங்கே இருந்திருக்கின்றன.

சங்கம வம்சத்து முதல் மூன்று மன்னர்கள், செயற்கரிய செயல்களைச் செய்துள்ளனர். அவர்கள் ஆண்ட காலத்தின் தடயங்களாக நமக்கு கிடைத்திருப்பவை, ஹம்பி நகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருக்கின்றன. அவற்றில் பல சிதைவுற்ற நிலையில் இருக்கின்றன. கர்நாடக மாநிலத்திலேயே மிகப் பெரிய கோபுரத்தைக் கொண்ட கோயில் ஸ்ரீ விருபாக்ஷேஷ்வரர் சிவன் கோயில்தான். அதன் ராஜகோபுரம் 165 அடி உயரம் கொண்டது. இந்த கோபுரத்துக்கு ‘பிஸ்டப்பையா கோபுரம்‘ என்ற பெயரும் உள்ளது.



இந்த கோபுரத்தின் வாயில் வழியாக கோயிலுக்குள் சென்றால், 510 அடி நீளம் 130 அடி அகலம் உள்ள பெரிய உள் பிரகாரம் உள்ளது. இதன் மத்தியில் துங்கபத்திரா ஆற்றுநீர் சிறிய வாய்க்கால் வழியாக ஓடுகிறது. பெரிய கோபுரம் தவிர இரண்டு சிறிய கோபுரங்களும் இந்த கோயிலில் உள்ளன. முதல் பிரகாரம் தாண்டி உள்ள கோபுரம் ‘ராய கோபுரம்‘ என்று அழைக்கப்படுகிறது. கிருஷ்ண தேவராயர் தனக்கு முடிசூட்டப்பட்ட நாளின் நினைவாக 1510—ஆம் ஆண்டில் இந்த கோபுரத்தைக் கட்டியதால் அதற்கு இந்த பெயர்.

வடக்கு திசையில் ஒரு கோபுரம் உள்ளது. அது ‘கனககிரி கோபுரம்‘ என்றழைக்கப்படுகிறது. பிரகாரத்தைச் சுற்றிலும் பல சிறிய கோயில்கள் உள்ளன. பாதாளேஸ்வரர், முக்தி நரசிம்மர், சூரிய நாராயணர், சரஸ்வதி, கணபதி, வெங்கடேஸ்வரர், ஸ்ரீபார்வதி பம்பாம்பா, ஸ்ரீபுவனேஸ்வரி தேவி கோயில்கள் உள்ளன. வெளிப்புறத்தில் ‘மன்மத தீர்த்தம்‘ என்ற குளம் உள்ளது. அதற்கு சிறிது தூரத்துக்கு அப்பால் துங்கபத்திரா ஆறு ஓடுகிறது. மண்டபங்களில் மேல்பாகம் நீளமான பாறாங்கற்களால் மூடப் பெற்றுள்ளது. அதில் பண்டைய காலத்தின் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கோயிலுக்கு வெளியே உள்ள ஹம்பி தேர் வீதியில் ஒரே பெரிய பாறையில் செதுக்கப்பட்ட ‘எதிர் பஸவண்ணா’ என்ற பெரிய நந்தி உள்ளது.

துங்கபத்திரா ஆற்றின் அருகே உள்ள இன்னொரு கோயில் ராமர் கோயில். ஆற்றில் இருந்து பார்த்தால் 60— 70 அடி உயரத்தில் கோதண்டராமர் கோயில் தெரியும். மழைக்காலத்தில் இந்த கோயிலுக்கு உள்ளேயும் ஆற்றுநீர் வந்துவிடும். இந்த கோயிலின் முன்புறம் சிறிது உயரத்தில் யந்தோராத்தாரக ஹனுமார் கோயிலும் உள்ளது. இந்த ஹனுமார் கோயிலுக்கு அருகே அனந்தசயனகுடி ரங்கநாதர் கோயில் உள்ளது. இங்கே மூர்த்தி இல்லை. இந்த கோயிலிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் அச்சுததேவராயர் கோயில் உள்ளது. 1539—இல்



கிருஷ்ணதேவ ராயரின் தம்பியான அச்சுததேவ ராயரால் கட்டப்பட்ட இந்தக் கோயிலிலும் இப்போது சிலைகள் இல்லை.

கர்நாடக இசை மேதை புரந்தரதாசரின் நினைவைப் போற்றும் வகையில் 1540—ஆம் ஆண்டில் துங்கபத்திரை ஆற்றின் கரையில் புரந்தரதாசர் மண்டபத்தைக் கட்டியிருக்கிறார்கள். இப்போதும் அங்கே ஒவ்வோராண்டும் புரந்தரதாசர் விழா நடத்தப்படுகிறது. புரந்தரதாசர் மண்டபத்துக்கு சிறிது தொலைவில் விஜயவிட்டல ஆலயம் உள்ளது. இந்தக் கோயிலில் கல் தூண்கள் உள்ளன. ஒரு கல் தூணில் 16 சிறிய கல் தூண்கள் சேர்ந்திருக்கின்றன. இந்த சிறிய கல் தூண்களைத் தட்டினால் ஒவ்வொரு தூணிலிருந்தும் ஒவ்வொரு விதமான இசை ஒலிக்கும். எல்லாத் தூண்களும் ஒரே கல்லினால் செதுக்கப்பட்டு உள்ளன. ஒரே தூணில் வெவ்வேறு இசை என்பது இக்காலத்திலும் வியப்பளிப்பதாகவே உள்ளது.இந்த கோயிலில் கல்லினால் செய்யப்பட்ட ரதம் உள்ளது. இந்த கல் ரதம் தற்போது ஓடுவதில்லை. கல் சக்கரத்தில் வேலைப்பாடுகள் உள்ளன. இந்த கல் ரதத்தின் வலது பக்கத்தில் உள்ள கல் மண்டபத்தை 1513 — இல் கிருஷ்ணதேவ ராயர் கட்டியதற்கான சான்றுகள் உள்ளன.

ஹம்பியின் வலது புறம் ஹேமகூடம் என்ற சிறு மலையும், இடது புறம் ரத்னகூடம் என்ற சிறு மலையும் உள்ளன. ரத்னகூடத்தில் ஜைன மதத்தினருக்கான குருபீடம் உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை பல மாநிலங்களில் இருந்து ஜைன மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மலையில் ஒன்று கூடி விழா நடத்துகிறார்கள்.18 அடி உயரம் உள்ள கணபதி சிலை உள்ள கடலைக்காய் கணபதி கோயிலின் மண்டபங்கள் இப்போதும் நல்ல முறையில் இருக்கின்றன.




ஆனால் சிலை மட்டும் உடைந்து இருக்கிறது. ஹோஸ்பெட் — கமலாபுரம் அருகில் கணபதி கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் உள்ள 12 அடி உயர கணபதி, 'பெரிய கணபதி' என்று அழைக்கப்படுகிறது. இதற்கு நேர்மாறாக 'கடுகு கணபதி' என்றும் சிலர் அழைக்கின்றனர்.

இவ்வாறு விஜயநகரப் பேரரசு ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பல கோயில்கள், பல மண்டபங்கள், நீச்சல் குளங்கள்,அங்காடிகள், தர்பார் போன்ற பல நினைவுச் சின்னங்கள் பராமரிக்கப்படாமல் இருப்பதைப் பார்க்கும்போது வேதனையாக உள்ளது. வரலாற்றின் பொக்கிஷங்களான அவற்றில் பல சிதிலமடைந்து உள்ளன.

வரலாற்றின் தடயங்களைப் பாதுகாப்பதில் ஆட்சியாளர்கள் அக்கறை காட்ட வேண்டும். விஜயநகரப் பேரரசு காலத்திற்குப் பிறகு ஆட்சி செய்த யாருமே அப்படிப்பட்ட அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதையே இந்த சிதிலங்கள் நமக்குக் காட்டுகின்றன. இந்த நிலை இனியும் தொடராமல் இருப்பதை தற்கால ஆட்சியாளர்களாவது உறுதி செய்ய வேண்டும்.



நிகழ்வு

# ராஜ

## ராஜமௌலியின் வெற்றிப்பயணம்

கடந்த 20 ஆண்டுகளில், 7 வெவ்வேறு கதாநாயகர்களுடன் 12 படங்களை இதுவரை எடுத்துள்ளார். எல்லாமே பாக்ஸ் ஆபீஸில் பட்டையைக் கிளப்பியவை. இதுதான் இயக்குநர் ராஜமௌலியின் அடையாளம்.

படத்தொகுப்பாளராக இருந்து இயக்குநரான ராஜமௌலியின் முழுப்பெயர் கோடுரி ஸ்ரீசால ராஜமௌலி. சின்னத்திரை தொடர்களின் இயக்குநராகத் தொடங்கி, இன்று திரையுலகில் பெரும் சாம்ராஜ்யத்தை கட்டி எழுப்பியிருக்கும் ராஜமௌலியின் பயணம் அவ்வளவு எளிமையானது அல்ல. இயக்குநராகத் தொடங்கியதிலிருந்து 20 ஆண்டுகளுக்குள், தெலுங்கு சினிமாவை உலக அரங்குக்கு கொண்டு சென்ற ராஜமௌலி, தெலுங்கு சினிமாத்துறையைக் கடந்து, இந்திய சினிமாத்துறையில், தன் தொடர் வெற்றிகளால் முத்திரை பதித்து கொண்டிருக்கிறார். எடிட்டர் ராஜமௌலி

இடைநிலைக்கல்வி முடித்த ராஜமௌலியிடம் நீ என்ன ஆகப்போகிறாய் என்று கேட்டால், நான் சினிமா இயக்குநர் ஆகப்போகிறேன் என்றுதான் பதில் சொல்வாராம். இதற்காக, ராஜமௌலியின் அப்பா அளித்த அறிவுரையை ஏற்று, சினிமாத்துறையின் பிற பிரதான வேலைகளையும் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். அப்படித்தான் எடிட்டிங் அவருக்கு அறிமுகமானது.

இயக்குநர் கே. ராகவேந்திர ராவிடம் உதவி இயக்குநராக சேரும்போது சினிமாவின் பல்வேறு துறைகள் குறித்தும் கற்றிருந்தார் ராஜமௌலி.கே. ராகவேந்திர ராவின் வழிகாட்டுதலில் சில விளம்பரப்படங்களை இயக்கிய பிறகு, சாந்தி நிவாஸம் என்ற தொலைக்காட்சித் தொடரை ஈ—டிவிக்காக இயக்கினார். ஆனால் சினிமா இயக்குநர் ஆக வேண்டும் என்ற ஆசை 2001ஆம் ஆண்டு வெளிவந்த ஸ்டூடண்ட் நம்பர் 1 என்ற படத்தின் மூலம் நிறைவேறியது. ராஜமௌலியின் குருவான ராகவேந்திர ராவ் படத்திற்கு திரைக்கதை எழுதினார். மேலும் தன் குருவின் மேற்பார்வையில் படத்தை இயக்கி முடித்தார் ராஜமௌலி.

தனது யமஹா பைக்கில் தினமும் ராகவேந்திர ராவ் வீட்டுக்குப் போய், அன்றைய தினம் எடுக்கப்பட்ட காட்சிகளைக் காண்பித்து ஆலோசனைகள் பெற்றுக்கொள்வார். ஸ்டூடண்ட் நம்பர்1 என்ற இந்தப் படத்தில்தான் ஜூனியர்







# குரு!

சிட்டத்தூர் ஹரிகிருஷ்ணா

என்.டி.,ஆர் கதாநாயகனாக நடித்தார், அந்த படம் ராஜமௌலி, ஜூனியர் என்.டி.ஆர் இருவருக்குமான வாய்ப்பாக இருந்தது. தொடர்ந்து இயக்கத்தில் ஈடுபட்டிருந்த ராஜமௌலியை ஒரு வெற்றிபெற்ற இயக்குநராக அடையாளம் காட்டியது சிம்ஹாத்ரி (2003) படம்தான்.

இரண்டு வருடத்திற்கு பிறகு தனது இரண்டாவது படத்திற்கான பணியை தொடங்கினார். இதிலும் ஜூனியர் என் டி ஆர்தான் ஹீரோ. ஆனால் அதற்குள் ஆடி என்ற படத்தில் நடித்து அது பெரும் வெற்றி பெற்றிருந்தது. எனவே இந்த படத்தையும் ப்ளாக் பஸ்டர் ஹிட் ஆக்க வேண்டிய அழுத்தம் ராஜமௌலிக்கு இருந்தது. அதேபோல அவர் இரண்டாவதாக இயக்கிய சிம்ஹாத்ரி படம் ப்ளாக் பஸ்டர் ஹிட் அடித்தது. அதற்கு பிறகு அவருக்கு கிடைத்தது எல்லாமே வெற்றிதான்.

அந்தவரிசையில் அவர் இயக்கிய பரபரப்புக்குப் பஞ்சமில்லாத போலிஸ் கதையான விக்ரமர்குடு மிகப்பெரிய வெற்றியை ஈட்டித்தந்து அது ராஜமௌலியின் இடத்தை இந்திய சினிமாவில் உறுதி










செய்தது.

## சாதனைகள்

பாகுபலி திரைப்படத்துக்கு முன்பாக மகதீரா (மாவீரன்) திரைப்படம் மூலம் பெரும் ரசிகர்களை பெற்றிருந்தார் ராஜமௌலி. தன் தந்தை விஜயேந்திர பிரசாத் எழுதிய கதையிலிருந்து உருவான அந்தப் படத்துக்காக (மாவீரன்) 15 ஆண்டுகள் காத்திருந்ததாக ராஜமௌலி தெரிவித்திருந்தார். இந்த படத்தில் நாயகனாக நடித்த ராம் சரண் தேஜாவும் அதன்பிறகு பெரும் வெளிச்சத்தை அடைந்தார். மகதீரா படத்திற்கு பிறகு ராஜமௌலி என்ன படத்தை இயக்குவார் என அனைவரும் எதிர்பார்த்து கொண்டிருந்த சமயத்தில் 'நான் ஈ' படத்தை எடுத்தார் ராஜமௌலி. தனது படங்களில் தனக்கு மிகவும் பிடித்த படம் இதுதான் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு ஈயை கதை நாயகனாக கொண்டும் கூட என்னால் வெல்ல முடியும் என்று நிரூபித்த படம் அது. ஆனால், “அது உண்மையில்லை. கதை சிறப்பாக இருந்தால் யாரும் எதிலும் வெற்றி பெறலாம்“ என்று ராஜமௌலி தன் நேர்காணல்களில் கூறுவார். இது பாகுபலியை காட்டிலும் கடினமாக ஒரு படமாகதான் இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




இதுவரை ராஜமௌலி எடுத்த படங்களில் அதிக வருவாய் ஈட்டியது பாகுபலி திரைப்படம்தான். இந்தியா முழுவதும் பெரும் வரவேற்பை பெற்றது பாகுபலி. கட்டப்பாவை கொன்றது யார்? என்ற கேள்வி இந்தியா முழுவதும் கேட்கப்பட்டது. இது சர்வதேச அளவில் பெயர் பெற்றது. அது ஒரு சூப்பர் ஹீரோ படமாக உலகிற்கு அறிமுகமானது. பாகுபலி சர்வதேச அளவில் பெரும் புகழ்பெற்றிருந்தாலும் அதில் உள்ள உருக்கமான காட்சிகள் மேலும் சிறப்பாக இயக்கப்பட்டிருக்கலாம் என்று ராஜமௌலி பலமுறை தனது நேர்காணலில் தெரிவித்துள்ளார். பாகுபலி ஒரு துணிச்சலான முயற்சி என்று பலரும் தெரிவித்தாலும் அதை மறுக்கும் ராஜமௌலி அனைவரும் வாழைப்பழம் விற்ற ஒரு இடத்தில் தான் மாம்பழம் விற்றதே தனது விளம்பர யுக்தி என்பார்.

## வாழ்நாள் குறிக்கோள்

ராஜமௌலி இயக்கத்தில் தற்போது வெளியாகிய ஆர்.ஆர்.ஆர் திரைப்படம்,பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தைக் கதைக்களமாகக் கொண்ட இந்தப் படத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இல்லை. 300 — 400 கோடி ரூபாய் செலவில் எடுக்கப்பட்ட இந்தப் படத்துக்கான டிக்கெட்களை விலை உயர்த்தி விற்பனை செய்ய தெலங்கானா மற்றும் ஆந்திர

பிரதேச அரசுகள் அனுமதி வழங்கின.

ஆனால், இப்படியான வெற்றிப்படங்களைக் கடந்து, தன் வாழ்நாள் குறிக்கோள் என்பது மகாபாரதத்தை இயக்குவதுதான் என்கிறார் ராஜமௌலி. பலமுறை பொதுவெளிகளிலும், நேர்காணல்களிலும் இதை மீண்டும் மீண்டும் பேசியிருக்கிறார். காரணம், சிறுவயது முதலே இவர் கேட்டு வளர்ந்த மகாபாரதக் கதைகள்தான் இன்னும் இவரது மூளையில், பிரமாண்ட படங்களாக ஓடிக்கொண்டிருக் கின்றன. அதை அப்படியே படமாக எடுத்தால் நிச்சயம் பெருவெற்றி கிடைக்கும் என்றும் சொல்கிறார் ராஜமௌலி.



கனவிலும் கற்பனையிலும் இருக்கும் கதைகளை காட்சிக்கு கொண்டுவரும் தன் கலையால் கிடைத்த தொடர் வெற்றிகளாலும் குவியும் ரசிகர்களின் ஆதரவாலும் இந்திய சினிமாவின் தவிர்க்கமுடியாத இயக்குநர்களில் ஒருவராக மாறியிருக்கிறார் இயக்குநர் ராஜமௌலி.

## விமர்சனங்கள்

ராஜமௌலி பல வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், அவரின் படங்களில் அதீத வன்முறை காட்சிகள் வைக்கப்படுவதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதேபோல வழக்கத்திற்கு மாறான கதாபாத்திரங்களை வடிவமைக்கும்போது சினிமாவில் உள்ள வரைமுறை சுதந்திரத்தை அளவுக்கு மீறி எடுத்துக் கொள்கிறார் என்ற ஒரு விமர்சனமும் உண்டு. அவரது ரசிகர்கள் வைக்கும் குற்றச்சாட்டு, அவர் படங்களுக்கு இடையே அதிக இடைவெளி எடுத்து கொள்கிறார் என்பது. இதனால் பல சமயங்களில் நடிகர்கள் அதிக நாட்கள் கால்ஷீட் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. ஆர் ஆர் ஆர் திரைப்படத்தை விருது நிகழ்ச்சிகளில் பங்கேற்க செய்வதற்கு மட்டுமே படக்குழு 83 கோடி வரை செல்வழித்திருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

பாகுபலி படத்தின் பிரமாண்ட வெற்றிக்கு பிறகு எஸ்.எஸ். ராஜமௌலியின் இயக்கத்தில் உருவான திரைப்படம் ஆர்.ஆர்.ஆர். இந்திய சுதந்திரத்திற்காக போராடிய அல்லூரி சீதாராம ராஜூ மற்றும் கொமாராம் பீம் ஆகியோரை மையப்படுத்தி எடுக்கப்பட்ட இப்படத்தில் ராஜூவாக ராம் சரணும், பீமாக ஜூனியர் என்.டி.ஆரும் நடித்தனர்.




இவர்களுடன் நடிகை ஆலியா பட், சமுத்திரக்கனி, அஜய் தேவ்கன் உள்ளிட்ட பலரும் நடித்திருந்தனர். பிரபல இசையமைப்பாளர் கீரவாணி இசையமைத்த இந்த படம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் வெளியானது. எக்கச்சக்க எதிர்பார்ப்பில் வெளியான இந்த படம் மக்களிடம் ஏகோபித்த வரவேற்பை பெற்று 1200 கோடி ரூபாய்க்கும் மேல் வசூலித்தது.

இந்த வரவேற்பை தொடர்ந்து ஆர்.ஆர்.ஆர் திரைப்படம் ஜப்பானில் வெளியானது. அங்குள்ள மக்களிடமும் நல்ல வரவேற்பை பெற்ற ஆர்.ஆர். ஆர் அங்கும் பாக்ஸ் ஆஃபிஸில் நல்ல வசூலை ஈட்டியது. குறிப்பாக ஜப்பானில் முன்னதாக வெளியாகி அதிக வசூலை ஈட்டிய இந்திய படம் என்று சாதனை படைத்திருந்த ரஜினியின் முத்து படத்தின் வசூலை விட அதிகமாக வசூலித்து சாதனை படைத்தது. இதன் மூலம் ஜப்பானில் வெளியாகி அதிக வசூலை ஈட்டிய இந்திய படமாக ஆர்.ஆர்.ஆர் மாறியது. இதுமட்டுமல்லாமல்



இந்தப்படத்தில் இடம் பெற்று வரவேற்பை பெற்ற 'நாட்டு நாட்டு' பாடல் கோல்டன் குளோப் விருதையும் வென்றது. ஹாலிவுட்டின் புகழ்பெற்ற இயக்குநர்களான ஸ்டீவன் ஸ்பீல்பெர்க், ஜேம்ஸ் கேமரூன் ஆகியோரும் இந்தப்படத்தை வெகுவாக பாராட்டினர். அதனை தொடர்ந்து அண்மையில் நடைபெற்ற ஹாலிவுட் கிரிட்டிக்ஸ் விருது விழாவிலும் 4 விருதுகளை ஆர்.ஆர்.ஆர் திரைப்படம் வென்றது.

இந்த நிலையில் பிரபல ஊடகமான பிங்க் வில்லா ஆஸ்கர் உட்பட பல விருது நிகழ்ச்சிகளுக்கு ஆர்.ஆர்.ஆர் படத்தை கொண்டு செல்ல இயக்குநர் ராஜமௌலி மற்றும் படக்குழு கிட்டத்தட்ட 83 கோடி வரை செல்வழித்துள்ளதாக ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறது. அந்த தகவலின் படி, " ஆஸ்கர், கோல்டன் குளோப் உள்ளிட்ட விருது நிகழ்ச்சிகளுக்கு ஆர்.ஆர்.ஆர் படத்தை கொண்டு செல்வதற்கான பிரசாரத்தை மேற்கொள்ள படக்குழு 83 கோடி ரூபாய் வரை செல்வழித்து இருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், அதில் பெரும் தொகையை இயக்குநர் ராஜமௌலியே தனது சொந்த பணத்தில் இருந்து எடுத்துக்கொடுத்துள்ளார்.



இதர தொகையானது ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் ஆர்.ஆர்,ஆர் படம் வசூலித்த தொகையில் இருந்து கொடுக்கப்பட்டு இருக்கிறதாம். ஆனால் இது குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் ஏதும் வெளியாக வில்லை.

முன்னதாக இந்தியாவில் இருந்து ஆஸ்கர் விருதிற்கு ஆர்.ஆர்.ஆர் திரைப்படம் செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்தியா சார்பில் அந்தப்படம் அனுப்பபடவில்லை. இந்த நிலையில்தான் தனியாக ஆஸ்கர் விருதில் களமிறங்க ஆர்.ஆர்.ஆர் படக்குழு முடிவெடுத்தது. அதே பாணியில்தான் அவர்கள் கோல்டன் குளோப் விருது மற்றும் ஹாலிவுட் கிரிட்டிஸ் விருது நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ஆஸ்கர் விருதுக்கு 'நாட்டு நாட்டு' பாடல் தேர்வாகி இருக்கிறது.

இதுவரை 12 படங்களை இயக்கியிருக்கிறார் ராஜமௌலி. அனைத்துமே வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் வெற்றிப் பெற்ற படங்கள். இந்த சாதனையை இந்திய சினிமாவில் இதுவரை யாரும் நிகழ்த்தியதில்லை. இந்தச் சாதனையை முறியடிக்க இன்னும் பல வருடங்கள்கூட ஆகலாம்.

ஒரு படத்தை ஆரம்பத்தில் இருந்து பார்த்தால் தான் புரியும். 10 நிமிட காட்சிகளை மிஸ் செய்தால் கூட படம் பார்க்கும் சுவாரஸ்யம் குறைந்துவிடும். ஆனால் இவரது படங்களை கடைசி 10 நிமிடங்கள் பார்த்தால் கூட கதைக்குள் நம்மை இழுத்து சென்றுவிடுவார். ஆம், அது தான் இயக்குநர் ராஜமௌலியின் ஸ்பெஷல். ஸ்டூடண்ட் நம்பர் 1 படம் மூலம் இயக்குநராக கால் பதித்த ராஜமௌலி தனது படைப்புகள் மூலம் இன்று உலகையே திரும்பி பார்க்க வைக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளார்.

ஆரம்ப கட்டத்தில் இவருக்கு ஒரு சீரியலின் ஒருசில எபிசோட்களை இயக்கும் வாய்ப்பு தான் கிடைத்தது. ஆனால் எதற்கும் அசராமல் தனது நம்பர் 1 கனவை இன்று நினைவாக்கியுள்ளார். கிடைக்கும் வாய்ப்பை தனக்கான பாதையாக உருவாக்கி இன்று இமயம் தொட்டுள்ளார் ராஜமௌலி.



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
CELEBRATING
14
ANNIVERSARY
THANK
YOU

சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு



34

## 34. வஞ்சிக்கு வந்த வஞ்சி!

**கொற்றவன்**

புள்ளினங்கள் கூடடங்கியதால், அவற்றின் ஓசை அடங்கி இருந்தது.

கதிரவனின் பொன்னொளி மறைந்து சந்திரன் தலைக்காட்டும் நேரம்!...

வஞ்சி மாநகருக்கு வெளியே அடர்ந்த சோலைகளுக்கு நடுவே நீண்ட பாதையில் ஒரு பல்லக்கு சென்று கொண்டிருந்தது. அதற்குப் பாதுகாப்பாக முன்னே நால்வரும் பின்னே நால்வருமாக வேல்களும் வாள்களும் இலச்சினைக் கொடிகளும் ஏந்தியபடி வீரர்கள் சென்றனர்.

இருட்டிய நேரத்தில் மாளிகையை நோக்கி அப்பல்லக்கு செல்வதை அந்த வழியில் சென்று கொண்டிருந்த ஓரிருவர் கவனிக்கத் தவறவில்லை!

இந்த நேரத்தில், ஊருக்கு வெளியே இவ்விதம் பல்லக்கில் செல்வது யாராக இருக்கக்கூடும்?

துறவு வாழ்வில் சிறந்து விளங்கும் இளங்கோவின் இருப்பிடம் நோக்கிச் செல்வது அரச பரம்பரையைச் சார்ந்த அவரது உறவினர்களாகத் தெரியவில்லையே!



ஏந்திச் செல்லும் கொடிகளைப் பார்த்தால், கணிகையர் குலத்தைச் சார்ந்த நாட்டிய மகளிர் போல் தெரிகிறதே!

பல்லக்கினை வழியில் கண்டவர்களுக்குள் ஐயம் எழுந்தது.

இவ்விதம் ஐயத்துடனே அங்கே சிலர் தாங்கள் செல்ல வேண்டிய வழியை விட்டு பல்லக்குப் போகும் திசையை பார்த்த வண்ணமே நின்றிருந்தனர்.

இளங்கோவின் மாளிகையைச் நோக்கிச் செல்லக்கூடிய சோலைவனப் பாதையில் அப்பல்லக்கு திரும்பியதும், கேள்வியோடு நின்றிருந்தவர்களுக்கு பதில் கிடைத்தது போலிருந்தது.

ஆம்! அரச குலப் பெண்டிர்தான் ராஜாங்க விஷயமாக ஏதோ பேச வந்திருக்கிறார்கள்!..

தாங்களாகவே விடை கண்டவர்களாக தம் வழியே பயணப்படத் தொடங்கினார்கள்.

நான்மணி மாடத்தின் தீபங்களின் ஒளியால் மிகவும் பிரகாசமாக இருந்த அந்தக் கூடத்தில் நடுநாயகமாக நடுவே போடப்பட்டிருந்த மஞ்சத்தில் அமர்ந்திருந்தார் இளந்துறவி இளங்கோ.

ஒரு ஓலையில் எழுதி முடித்த வரிகளை படித்தவாறே, கண்களை மூடி அடுத்த காட்சியை எழுதுவதற்கு தோதாக எழுத்தாணியைத் தன்

தாடையில் தட்டியபடி மஞ்சத்தில் சாய்ந்து விட்டத்தை ஏறிட்டார்.

அவர் கண்கள் தானாக மூடிக்கொண்டன. மனத்திரையில் காட்சிகள் ஓடிக்கொண்டிருந்தன.

அமைதி சூழ்ந்த அந்த வேளையில்...

சட்டென தனது மாளிகை வாசலில் எழுந்த பேச்சரவத்தைக் கண்டு பார்வையைத் திருப்பினார்.

அப்போது வேகமாக அங்கே வந்து நின்ற வீரனொருவன், "அடியேனை மன்னிக்க வேண்டும்!" என்று பணிவோடு வணங்கினான்.

"என்ன முகுந்தா?" சலனமற்ற குரலில் வினவினார் இளங்கோ.



"தங்களைக் காண்பதற்கு நாட்டியத் தாரகை ஒருவர் வந்திருக்கிறார்!"

"இந்த நேரத்திலா?"

"இதைத்தான் நானும் கேட்டேன். நாளை காலையில் வரச் சொல்ல..."

வார்த்தையை முடிப்பதற்குள்ளாகவே இளங்கோவின் பார்வை, வாயிற்பக்கம் திரும்பியதையும், தனக்குப் பின்னால் சுகந்த மணமும் வளையோசையும் கேட்டதில், திரும்பிய முகுந்தன் மலைத்தான்.

'என்ன வேகம் இந்தப் பெண்ணுக்கு? பல்லக்கில் அமர்ந்திருந்தவள் அதற்குள் இங்கே வந்து நிற்கிறாளே! புலவரிடம் அனுமதி பெற்று வருவதற்குள் அத்துமீறி நுழைந்து விட்டாளே! என்னவொரு துடுக்குத்தனம்!' முகுந்தனுக்கு கோபம் கொப்பளித்தது.

"என்ன முகுந்தா அம்மணியின் வரவைத் தெரிவிக்க வந்தாயா? அல்லது அழைத்து வந்துவிட்டதை அறிவிக்க வந்தாயா?" என்ற இளங்கோவின் இதழ்களில் இளநகை தவழ்ந்தது.

"மன்னிக்க வேண்டும்! அம்மையாரின் வருகையை தெரிவிக்கவே வந்தேன். ஆனால் அதற்குள் இவர் என்னை மீறி..." மீண்டும் முகுந்தன் வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள் இடைபுகுந்தாள் அந்தக் கட்டழகி.

"என்னையும் மன்னிக்க வேண்டும்! தங்களைக் காணும் ஆவலில் காத்திருக்க இயலாமல் வந்து விட்டேன்!"

திடீரென அம்மாளிகையின் நிலைப்படியில் வந்து நின்றவளின் வடிவழகைக் கண்டு இளங்கோ வியப்புற்றார்.


சேர நாட்டில் அழகிகளுக்கா பஞ்சம்? ஆனாலும் இந்தப் பேரழகியின் அழகு தேவலோகப் பெண்களுக்கு இணையானதாக அல்லவா பொலிகிறது!

வலக்கை நிலையைப் பிடித்தபடியும், இடக்கை சிற்றிடையில் வைத்தபடியும், தலையை ஒருபக்கம் சாய்த்து அவள் நின்ற தோரணையையும், வனப்பையும் விவரிக்க இயலாத வியப்புடன் இளங்கோ பார்த்துக் கொண்டிருந்தார்.

கொள்ளை அழகுப் பொலியும் முகம்! சந்திரனை மறைக்க முயன்ற மேகம் தடுமாறி ஓடுவது போல், அவளது சந்திர வதனத்தை மறைக்கும் விதமாக,

காற்றில் களைந்து அலைந்த கேசத்தின் ஒன்றிரண்டு கற்றைகள் முகத்தில் படர்ந்து விளையாடியது.

கூரான நாசியும், பளிங்கு போன்ற தெளிந்த நீரில் கயல்போல் நீந்தும் விழிகளும், வில்லொத்த புருவமும், சிவந்த மாங்கனிகளைப் போல் மின்னும் கன்னங்களும், தேனில் ஊறிய சுளையென மின்னிய ஈர இதழ்களும், தன்னிடம் ஏதோ சொல்ல வருவதுபோலவே துடிக்கவிட்ட பாங்கும் இளங்கோவுக்கு ஒன்றை மட்டும் பளிச்சென பறைசாற்றியது.






துறவிகளையும் துறவைச் துறக்கச் செய்யும் பேரழகுச் சிலை இவள்! எச்சரிக்கை தேவை இவளிடம்!

இளங்கோ அரியணையையும், அரசு சுகத்தையும், அரண்மனைப் பகட்டையும் புறந்தள்ளியவர்தான்!

விதியின் ரூபத்தில் மதி மயக்கம் தரக்கூடிய எதுவும் தம்மை சூழ்ந்து வருவதை தடுக்கக் கூடியவர்தான்!

அத்தகையவருக்கு விதியின் வலிமை எவ்வளவு சக்தி வாய்ந்தது பார் என்பது போன்ற அறைகூவல் அந்த அறையில் எழுவது போலவே உணர்ந்தார்.

விதியைத் தன் மதியால் மாற்றும் வல்லமையை முன்பே உலகுக்கு உணர்த்தியவர்தானே இளங்கோ.

அந்தக் கட்டழகி வீசிய கணைகளில் இருந்து தப்பித்தவராக நிலை திரும்பினார்.

“தங்கள் வரவு நல்வரவாகுக!” இருகரம் குவித்து வணங்கியபடியே கூறினார் இளங்கோ.

அதைக் கேட்டதும் அந்தக் கட்டழகுக் காரிகையும் சிரம்தாழ்த்தி வணங்கினாள். ஆனால் அவள் தலைவணங்குவது கூட, ஒரு நாட்டியத் தாரகை வணங்குவது போலல்லாமல், தன்னெதிரே வணக்கம் சொல்லும் சேவகனுக்கு அரசர் தரும் அனுமதி போன்ற தோரணையையே காட்டியது.

“இந்தக் குடிலின் கதவுகள் யாருக்கும் அடைபடுவதில்லை! எல்லோருக்கு மானவைதான் என்றாலும்...”

“அவர் வார்த்தைகளை முடிப்பதற்குள் அவள் முந்திக் கொண்டாள்.

“புலவர் பெருமான் என்னை மன்னிக்க வேண்டும். நான் தங்களிடம் தனிமையில் உரையாடத்தான் வந்தேன்!” என்றவாறே முகுந்தனை நோக்கி ‘நீ சற்று வெளியில் இரு’ என்ற தோரணையைப் பார்வையிலேயே காட்டினாள்.

அதைக் கண்டு முகுந்தன் துணுக்குற்றவனாய் இளங்கோவைப் பார்த்தான்.

“முகுந்தன் வாயில் காப்போன் என்று தாங்கள்

நினைத்திருந்தால், அது தவறு! அவன் என் உடன் பிறந்த சகோதரனைப் போன்றவன்!" என்று இளங்கோ கூறியதைக் கேட்டு நகைத்தாள் அந்தக் காந்தக் கண்ணழகி.



"அப்படியானால் பேரரசர் செங்குட்டுவருக்கும் இவர் சகோதரர்தானோ?" என்றவளின் ஏளனம் இளங்கோவைச் சற்று சீண்டி பார்ப்பதுபோலவே தோன்றியது.

"உடன் பிறந்தவன் என்று நான் கூறியது வெறும் வார்த்தை உளறலல்ல! உகந்த வார்த்தை! அதை நீங்கள் பரிகசிப்பது அழகல்ல!"

"மன்னிக்க வேண்டும்! நானும் பரிகசிக்கும் நோக்கில் கூறவில்லை! இவர் அவ்வளவு முக்கியமானவரா என்பதை அறிந்து கொள்ளும் நோக்கில்தான் வினவினேன். மன்னியுங்கள் புலவரே!" எனக் கரம் கூப்பியவள் அப்படியே திரும்பி, "முகுந்தரே! தாங்களும் மன்னிக்கவேண்டும். அதுமட்டுமல்ல, எங்கள் உரையாடலின்போது தாங்களும் உடனிருக்கலாம்!" என்றாள்.

அவள் புன்னகையோடு கூறிய அந்த வார்த்தைகளின் ஜாலத்தை எண்ணி வியந்தபடி, இளங்கோவைப் பார்த்தான் முகுந்தன்.

இளங்கோ அமைதியாகப் புன்னகைத்தார்.

அந்தப் புன்னகையின் பொருள் உணர்ந்தவனாக அவளை நோக்கித் திரும்பிய







முகுந்தன், "இருக்கட்டும் அம்மணி! தாங்கள் உரையாடுங்கள்! நான் வாசலிலேயே இருக்கிறேன்!" என்றவன், அங்கிருந்து அகன்றான்.

இளங்கோ குறித்து அவன் உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடு அது! சிறந்த போர் மரபில் வந்தவர், ஒரு பெண்ணை தனித்து எதிர்கொள்ள இயலாதவராகக் காட்டி விடக்கூடாது என்பதனாலேயே முகுந்தன் அங்கிருந்து அகல முற்பட்டான். இளங்கோவும் அதை உணர்ந்திருந்தார்.

வாயிற்படியில் இருந்து மெல்ல நடந்த அந்த நாட்டியத் தாரகை, இளங்கோவைத் தன் கூரிய விழிகளால் நோக்கியபடியே வந்து நின்றாள்.

அந்த வேல்விழிகளை இமைக்க மறக்காமல் உற்று நோக்கியவர், அவை காட்டும் அகக்காட்சியையும் படித்தபடியே அசையாமல் நின்றிருந்தார்.

மிகுந்த மன உறுதி கொண்டவளாகவே இளங்கோவின் கூரிய பார்வையை அவள் எதிர்கொண்டாலும், சில நொடிகளிலேயே அவ்விழிகளின் தாக்கத்தில் கட்டழகியின் கண்கள் தடுமாறத்தான் செய்தன. தானாகவே அவளது



வேல்விழிகள் தரை பார்த்து பணிந்தன.

சற்று முன்பு நிலைப்படியில் நின்ற அரச தோரணையும், அதிகாரத் தொனியுடன் முகுந்தனை விரட்டிய தோரணையும், இளங்கோவைத் தன் விழிகளால் வீழ்த்த நினைத்து வந்து அழகின் தோரணையும், கணப் பொழுதில் அவளிடமிருந்து விலகி



அடக்கமான பெண்ணின் நாணம் அவளை ஆட்கொண்டது.

இயற்கை பெண்களுக்கென அளித்திருக்கும் கொடையோ? இறைவன் அளித்திருக்கும் கொடையோ? எதுவோ புரியவில்லை! ஆனால் அவளால் சில நொடிகள் இளங்கோவை ஏறெடுத்து பார்க்க முடியவில்லை!

அந்த சில நொடிகள்தான் அவளுக்குள் இளங்கோ ஊடுருவிக் கொண்டிருந்தார்.

அரியணை ஏறி, அரசு தரும் அத்தனை சுகங்களையும் அனுபவித்து மகிழ வேண்டியவர், இப்படித் தன்னந்தனியனாய் ஊருக்கு வெளியே ஒதுங்கி துறவுக் கோலம் பூண்டு விட்டாரே!

இன்று காஷாயம் கட்டிக் கொண்டு நின்றிருந்தாலும்... அன்று வாளும் வேலும் ஏந்தி போர்க்களத்தில் பாய்ந்த வேங்கையல்லாவா? உருண்டு திரண்டிருந்த தேகமும், அரசகளையுடன் எவரையும் வசீகரிக்கும் கண்களும், கவர்ந்திழுக்கும் கந்தர்வ அழகு முகமும் இன்னமும் மாறாமல்தான் இருக்கிறார்.

நாணத்தோடு அவர் அருகில் வந்து நின்றவள்

தன் வெட்கத்தை மறைக்கும் முகமாக, மீண்டும் தனது அரச தோரணையை வெளிப்படும்படி அவரை நிமிர்ந்து நோக்கினாள்.

“தங்களைக் காணக் கிடைத்தது எனது பாக்கியம்!”

அந்தக் கட்டழகி கூறியதைக் கேட்டு இளங்கோ புன்னகைத்தார்.

“நான் யார் என்பதை அறிந்துதான் வந்திருக்கிறீர்களா?”

“தங்களின் பெருமையை நாடே அறியுமே! எங்களின் காசி நகர் வரையிலும் புகழ் மேவி நிற்பவரை நான் அறியாமலா இருப்பேன்!

“என்னைப் பற்றிச் சொல்வதற்கு பெரிதாக ஒன்றுமில்லை இளவரசி!”

இளங்கோ அவளை இளவரசி என்றதும் பெரும் வியப்பிலாழ்ந்தவள், அதைக் காட்டிக் கொள்ளாமல், "என்ன புலவரே! ஒரு நாட்டியப் பெண் தங்களின் பார்வையில் இளவரசி போலவா தெரிகிறாள்?" தன் அதிர்ச்சியை வினாவாகத் தொடுத்தாள்.



"தாங்கள் நாட்டியம் ஆடக்கூடியவர் என்று தெரிகிறது. ஆனாலும் அரச குலத்துக்கே உரிய தோரணையும் வனப்பும் தங்களிடம் மிகத் தெளிவாகவே தெரிகிறது!" என்றதைக் கேட்டதும் தலைக் கவிழ்ந்தாள் காசியின் அழகி.

"சேரநாட்டு நாட்டியமணிகள் கூட இளவரசிகளைப் போலத்தான் வலம் வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்! ஏன் நானும் ஒரு சிறந்த நாட்டிய பெண்ணாக இருக்கக் கூடாது? அதுமட்டுமல்ல, தாங்கள் என்னைப் புகழ்வதாக நினைத்து இகழ்கிறீர்களோ?"

"மனதில் பட்டதைச் சொன்னேன் இளவரசி!"

"பாருங்கள், என்னை மீண்டும் இளவரசி என அழைக்கிறீர்கள்! என்னைக் காஞ் சன மாலா எனப்பெயர் சொல்லியே தாங்கள் அழைக்கலாம்."

"ஆளுக்கு ஏற்ற பெயர் தான்! பொன்னையே மாலையாகச் சூடப்போகிறவன் வேண்டுமானால் அவ்விதம் அழைக்கலாம். நான் அழைக்க மாட்டேன் இளவரசி!" இளங்கோவின் வார்த்தைகள் காஞ் சனமாலாவின் கன்னங்களை நாணத்தில் சிவக்கச் செய்தன.

"சரி, தாங்கள் வந்த நோக்கம்?"

"அதைத்தானே செய்து




கொண்டிருக்கிறேன்!"

"என்ன?"

"தாங்கள் என் நாட்டியத்தைக் கண்டு மகிழ வேண்டும்!"

"எங்கே நாட்டியமாடப் போகிறீர்கள்?"

"தாங்கள் விரும்பினால் இங்கேயே!"

"என்ன?" திடுக்கிட்ட இளங்கோ, இவள் எங்கே வந்து என்ன பேசிக் கொண்டிருக்கிறாள் என்ற எண்ணம் மேலிட வியப்புடன் அவளை நோக்கினார்.

இளங்கோவின் கண்களுக்கு அழகியபெண் உருவம் மறைந்து படம் விரித்த நாகம் ஒன்று விரகத்தில் மயங்கி அவர் முன் ஆடுவது போன்று தோன்றவே, சட்டென இரண்டடி பின்னுக்கு நகர்ந்தார்.

(கனவு தொடரும்...)

கவிதை

# குகை ஓவியம்

நா. இளங்கோ

முடிவுறாத
ஒரு பயணத்தின் இடையில்
குகையொன்றில்
கண்மூடி விழிக்கிறேன்.

இமைகளின் சிறையில்
அடைபட்டிருந்த இருவிழிகள்
விழிப்பிலும் இருட்டில் மூழ்கி
மூச்சுத் திணறுகின்றன

இருட்போர்வை விலக்கி
வானத்து விண்மீன்களின்
கரம்பிடித்துக்
கரையேறத் தவிக்கையில்
சுழன்றடிக்கும் சூறாவளியாய்
அச்சம் என்னை
அலைக்கழிக்கின்றது

வெளிச்சக் கீற்றின்
துளிகளில் தாகம் தணிய
நீளும் நாக்கில்
இருட்டரவம்
தீண்டிக் களிக்கின்றது.

வாசலும் வழியுமறியா
குகைக் கோணியில் சுருட்டப்பட்டு
முடங்கிக் கிடக்கையில்
பாறையில் உயிர்க்கும்
வெண்கோட்டு ஓவியத்தின்
சூரியக் கிரணங்கள்
என்னை ஆரத்தழுவிக்
கதகதப்பூட்டுகின்றன



கண்டதும் சுட
உத்தரவாகியிருக்கும்
ரவுடியை
'பிரபல' என்கிற
அடைமொழியோடு
அடையாளப்படுத்தும்
வியாபார ஊடகங்கள்!

மரணத் தறுவாயில்
ஊட்டச் சத்தில்லாத
'குஷி' போன்ற
குழந்தைகள் பலர் இருக்க
கட்—அவுட்டுகளுக்கும்
கற்சிலைகளுக்கும்
குடம் குடமாய்
அபிஷேகம் செய்யும்
அறிவு ஜீவிகள்!

நித்தமும் லட்சக்கணக்கில்
ஆடுகளும் கோழிகளும்
அறுபட
நூற்றுக்கணக்கான
வெறிநாய்களிடமிருந்து
மனிதர்களைக் காப்பாற்றாத
சமூக நல அமைப்புகள்!

இன்னமும்
வாழும் வயிற்றுக்கே
கஞ்சி கிடைக்காத ஊரில்
போடும் ஆடைகளுக்கு
நித்தமும் கஞ்சி போட்டு
உலா வரும்
தோரணை மனிதர்கள்!

அதிகம் ஆடாதே!
'பிடி சாம்பலாய் போகும்
தேகம் உன்னுடையது!' என
ஆன்மிகம்
போதிக்க எத்தனித்தால்
வாசனை விபூதியை
பரிந்துரைக்கும்
பகட்டான பக்தி!

இதற்கெல்லாம் தீர்வாக
இனியாவது...
ஒரு விதி செய்வோம்!..




# இனியாவது ஒரு விதி

புவனகிரி கல்யாண்

## விக்ரம் நடத்தும் ‘ரெய்டு!’

வித்தியாசமான கதைக்களங்களை தேர்ந்தெடுத்து நடித்து வரும் விக்ரம் பிரபு, அடுத்ததாக ‘ரெய்டு’ திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் நடிகை ஸ்ரீதிவ்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இயக்குனர் கார்த்தி இயக்கத்தில் உருவாகி வரும் இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. அதிரடி ஆக்‌ஷன் காட்சிகள் நிறைந்துள்ள இந்த டீசரை ரசிகர்கள் இணையத்தில் அதிகம் பகிர்ந்து வருவதால், படத்தின் வெற்றி உறுதி என படக் குழு அறிவித்திருக்கிறது.





## வெற்றிக் கூட்டணியின் அடுத்த படம்!

## இதயங்களைக் கைப்பற்றட்டும்!

## ப்ரியா ராசி... பிரியமான ராசி!...

ஆர். கண்ணன் இயக்கி தயாரித்த படம் ‘காசேதான் கடவுளடா.’ ‘மிர்ச்சி’ சிவா, ப்ரியா ஆனந்த், யோகிபாபு உள்ளிட்டப் பலர் நடித்திருக்கும் இந்தப் படத்தின் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. இதில் பேசிய நடிகர் சிவா, “பெரிய படங்கள் எடுத்து அதை ரீமேக் செய்யும் பொழுது கண்டிப்பாக ஒப்பீடு இருக்கும் என்ற பயத்தோடுதான் இதனை எடுத்தோம். ஏதோ எங்களால் முடிந்தளவிற்கு நன்றாக கொடுத்திருக்கிறோம்.” என்றார். படத்தின் பக்கபலமாக ஸ்கோர் செய்து அள்ளியிருக்கிறார் ப்ரியா ஆனந்த். இந்த இணை வெற்றிக் கூட்டணி என்பதால், படத்தின் மீதான எதிர்பார்ப்பு கூடியிருக்கிறது.



## உதறலுடன் ஒரு படப்பிடிப்பு!

### ‘சும்மா அதிருதுல்லே!..’

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய், த்ரிஷா, அர்ஜுன், பிரியா ஆனந்த் உட்பட பலர் நடித்து வரும் படம் ‘லியோ.’ இதில் இந்தி நடிகர் சஞ்சய் தத் முதன்மை வில்லனாக நடிக்கிறார். காஷ்மீர் பகுதிகளில் நிலஅதிர்வு ஏற்பட்டதில், மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறிய நிலையில் அங்கு படப்பிடிப்பு நடத்திக்கொண்டிருக்கும் ‘லியோ’ படக்குழு அங்கு தங்களின் தற்போதைய நிலை குறித்த அப்டேட்டை ‘சந்திரமுகி’ படத்தில் பங்களாவிற்குள் பயந்து நடுங்கும் வடிவேலு வீடியோவைப் பகிர்ந்து ‘நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம் நண்பா’ என்று பதிவிட்டு இருக்கிறது.



## நூறு கோடியில் ஜெயம் ரவி படம்!

### பட்ஜெட் தருமா டார்கெட்?

ஜெயம் ரவி நடிப்பில் ‘பொன்னியின் செல்வன் 2’ படம் வெளியாக உள்ள நிலையில், ‘இறைவன்’, மற்றும் ‘சைரன்’ படங்களில் நடித்து வருகிறார் . இந்தப் படங்களைத் தொடர்ந்து உருவாகும் ஜெயம் ரவியின் 32ஆவது படத்தை வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் சார்பில், ஐசரி கணேஷ் 100 கோடி பட்ஜெட்டில் தயாரிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கும் இப்படம் பத்துக்கும் அதிகமான மொழிகளில் வெளியாகும் எனவும், இயக்குநர் மற்றும் நடிகர்களின் விவரங்கள் விரைவில் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தல வலம்


## ஆதி திருவரங்கம்

புலவர் புலனகிரி செயபாலன்

பிரம்மாவிற்கு மச்சாவதரமாக, மகாவிஷ்ணுவாக, பாற்கடல் பரந்தாமனாக, அருட்கோலம் காட்டிய தலமே இந்தத் ஆதி திருவரங்கம். இந்தக் கோயில் முதல் யுகமாகிய கிருதாயுகத்தில் அமைந்ததாக தல வரலாறு கூறுகிறது. இங்குள்ள ரங்கநாத பெருமாள், மகாபலி சக்கரவர்த்திக்கும் முற்பட்டவராகக் கருதப்படுகிறார்.



தென்பெண்ணை ஆற்றின் தெற்குக் கரையின் மேடான பகுதியில், ஐந்து ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் மிகப் பெரிய பெருமாள்களில் இவரும் ஒருவர்! இவர் ஸ்ரீரங்கம் ரங்கநாதரை விட பெரியவர்! அதனால்தான் இவரைப் பெரிய



பெருமாள் என்று அழைக்கிறார்கள்.

## புராணம்

சோமுகன் எனும் அசுரன் கடுமையான தவம் செய்ததன் மூலம் யாராலும் அழிக்க முடியாத நிலையைப் பெற்றான். தவத்தினால் பல வலிமையைப் பெற்றாலும், அசுரர்களைப் போன்ற மிருகத்தனத்தையும் ஆணவத்தையும் கொண்டிருந்தான். அதனால் மூவுலகும் தனது கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும் என்று நினைத்தான். எனவே அவன் தன் அசுரக் கூட்டத்தோடு தேவலோகத்தின் அரண்மனையில் அமைந்திருந்த இந்திரனிடம் சென்று தன் வீரத்தைக் காட்ட, இந்திரன் பயந்து தேவலோகத்தை விட்டு வெளியேறினான்.

அங்கிருந்த பிரம்ம தேவனைச் சிறை பிடித்து பிரம்மன் கையில் இருந்த நான்கு வேதங்களையும் பறித்து, வேதங்களை ஓத விடாமல் இருக்கச் செய்தான். வேதம் ஓதவில்லை என்றால் தர்மம் குலையும்! தமது குலத்துக்கு உண்டான அதர்மத்தையும், கொடுங்கோல் ஆட்சியையும் கொண்டு வந்து விடலாம் என முடிவெடுத்தான்.

அதன்படி ஆழ்கடலின் அடியில், தான் உருவாக்கி வைத்திருந்த இடத்திற்கு வேதங்களுடன் சென்று பதுங்கிக் கொண்டான். அதனால் உலகம் தன் சுழற்சியில் இருந்து பிறழ்ந்தது. அசுரர்கள் யாக குண்டங்களைச் சிதைத்ததுடன், வேதம் சொல்பவர்களைச் சிறை பிடித்து துன்புறுத்தினர். அவர்களுக்குக் கீழ்படிந்தவர்களை மன்னராக்கினர். தேவர்கள் தங்களை காத்துக் கொள்ள ஒவ்வொரு உலகமாகச் சென்று தங்கி வாழலாயினர்.

வேதம் உரைக்கும் பரந்தாமன், இதற்கெல்லாம் யார் காரணம் என்பதைத் தன் சக்தி மூலம் அறிய முற்பட, கடலுக்கு அடியில் வேதங்களை சோமுகன் வைத்திருப்பது தெரிந்தது. இதை மீட்க எண்ணி கடலுக்குள் மச்ச (மீன்) அவதாரமாக உருவெடுத்து, சோமுகனை உந்தித் தள்ளினார். மீன்தானே என அலட்சியம் காட்டியவனுக்கு, மீண்டும் மீன் அவனை உந்தித்தள்ள, உள்ளூர பயம் ஏற்பட்டு மீனை (மாயோனை) தன் மந்திர தந்திரங்களால் எதிர்த்தான்.

மீனை வெல்ல முடியாத நிலை வந்ததும், தன்னுடன் இருக்கும் அசுரர்களுடன் சேர்ந்து போரிட்டான். பக்கபலமாக வந்த அசுரர்களைக் கொன்று, சோமுகனை வதம் செய்து வேதங்களை மீட்டெடுத்தார். மேலும் அவனை தன் திருவடியில் சேர்த்துக் கொண்டார். சோமுகனை வதம் செய்த அதே வேகத்தோடு எம்பெருமான் தென்பெண்ணை ஆற்றங்கரையில் பிரம்மனைச் சந்தித்து அவருக்கு வேதங்களை கொடுத்து மீண்டும் ஒருமுறை உபதேசித்தார்.








## தல வரலாறு

ஒரு முறை சந்திரன் தனது மனைவிகளின் சாபத்தினால் கலைகள் குலைந்து ஒளி மங்கி பொலிவு இழந்து வருந்தினான். தேவர்கள் அறிவுரையால் இத்தலம் வந்து பெருமாளை வணங்கி தனது குறைகள் நீங்கப் பெற்றான். தென்கிழக்கில் உள்ள தீர்த்தத்தில் சந்திரன் நீராடி தவம் செய்தால், இத்தீர்த்தத்திற்கு சந்திர புஷ்கரணி என்ற பெயரில் உண்டாயிற்று!

பிரம்மா இத்தலத்தில், தான் திருமாலைக் கண்ட திருக்கோலத்திலேயே இங்கு ஆலயம் அமைத்து தாருங்கள் என வேண்டி நின்றார். தேவர்கள் பெருமாளை இதே இடத்தில் எப்போதும்



எழுந்தருள வேண்டும் என வேண்டினர். இவர்கள் வேண்டுகோளை கருணையுடன் கூர்ந்து ஏற்றார். அதன்படி எம்பெருமான் வைகுண்டம் ஏற்கும் முன், தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மாவை அழைத்து, திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட தம்முடைய திருமேனியைப் போல் ஆனந்த சயன மூர்த்தியாக நிர்மாணிக்க வேண்டும் என கட்டளையிட்டார்.

அதன்படி,நவபாஷாணத்தாலும்மூலிகைகளாலும் உருவாக்கியதுதான் திருமாலின் திருவடிவம்! மிகப்பெரிய பள்ளிகொண்ட பெருமாளை வடிவமைத்து ஒரு ஆலயத்தை நிர்மாணித்து, அதில் பிரதிஷ்டை செய்தார். எம்பெருமானும் பிரம்மா, தேவர்களின் வேண்டுகோளின்படி இத்தலத்தில் முதல் அவதாரத் திருத்தலமாக அமைந்துள்ள திருவரங்கக் கருவறையில் பக்தர்களுக்கு சேவை சாற்றி வருகிறார். இவர் சுதையால் உருவானவர் என்பதால் இவருக்கு தைலக்காப்பு இல்லை!



## மூலவர்

இரண்டு பிரகாரங்களைக் கொண்ட கோவிலின் முதல் பிரகாரத்தில் உள்ள கருவறையில் ஐந்து தலைகளைக் குடையாகக் கொண்டுள்ள ஆதிசேஷன் பாம்பணைப் படுக்கையில் 30 அடி நீளத்தில் பிரமாண்டமாகப் பள்ளி கொண்ட சயனப் பெருமாள் காட்சியளிக்கிறார். வலக்கையைத் தலையணையாக்கிக் கொண்டு இடக்கையை உயர்த்தி நாபிக்கமலத்தில் தோன்றிய நான்முகனுக்கு (பிரம்மா) நான்கு வேதங்களை உபதேசிக்கும் விதத்தில் 30 அடி நீளத்தில் திருமகளின் மடிமீது சயனித்திருக்கிறார்.

வடதிசை நோக்கி இருக்கும் இவரது திருவடியை நிலமகள் வருடியபடி அமர்ந்துள்ளார். மற்றொரு திருவடி ஆதிசேஷனின் வால் மீது உள்ளது. பெருமானின் வலது கையைத் தாங்கி மண்டையிட்டபடி கருடாழ்வார் அமர்ந்துள்ளார். திருமாலின் திருவடியின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் ஆளுயரக் கண்ணாடி வழியே தரிசித்தால், 30 அடி நீள திருமால் 60 அடியாக விஸ்வரூபமாகக் காட்சி தருகிறார். தமிழ்நாட்டில் உள்ள சயன கோலப் பெருமாள் கோயிலில் இது பெரியது என்று கூறப்படுகிறது.

கருவறையின் வலப்புறத்தில் உள்ளது தாயார் தனி சன்னதி கரங்களில் தாமரை மலர்கள் எழுதிய அமர்ந்த குளத்தில் சேவை சாற்றுகிறார் அரங்கநாயகி தாயார் அவருக்கு முன்னே தயாரித்த உற்சவ திருமேனி உள்ளது

தல ஒரு லட்சம் பொண்ணை மரம் திருத்தம் பெண்ணை ஆறுகருவறைக்கு செல்லும் வழியில் மும்மூர்த்திகள் அமர்ந்துள்ள மண்டபம் உள்ளது கருவறையை சுற்றி கோதண்டராமர் அனுமன் அங்கம் முழுவதும் அலங்கரிக்கும் மணிமாலைகள், கரங்களில் காப்பு,கடகம்,திருப்பாதங்களில் கொலுசு ,வலது கரத்தில் வெண்ணை உருண்டையுடனும், இடது கரத்தில் கயிறுடனும் கூடிய உறியுடனும்




கிருஷ்ணன் சன்னதிகள் அமைந்துள்ளன

கோதண்ட ராமர் சன்னதியில் ராமருடன் லட்சுமணன் சீதாப்பிராட்டியுடன் வழங்கிய கரங்களுடன் வினைய ஆஞ்சநேயர் இரண்டாவது பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் வரதராஜ பெருமாள் சன்னதி

வெளிப் பிரகாரத்தில் கைகளில் சங்கு, சக்கரம், கத்தி, கேடயம், திரிசூலத்துடன் அஷ்டபுஜ துர்க்கை உள்ளார். அருகில் 16 கரங்களுடன் அஷ்டபுஜ சக்கரத்தாழ்வார் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். பிரகாரத்தின் ஒரு பகுதியில் ரங்கநாதரை தரிசிக்கலாம். அவர் அருகில் சப்தஸ்வர ராமர் திருவுருவத் திருமணி ஏழு ஸ்வரங்களையும் எழுப்பும் அபூர்வ இசை சிற்பம்! ஆலயத்தின் வெளியே ரங்கநாதரை நோக்கியபடி சஞ்சீவிராயர் சன்னதி உள்ளது.

## கிருஷ்ணர்

இத்தலம் கிருஷ்ணருக்கு விருப்பத்தலமாக விளங்குகிறது. கொடிமரத்தின் அருகே உள்ள சுவற்றின் மீது ஒரு சாளரம் உள்ளது. அதன் வழியே பார்த்தால் உறியடி கண்ணன் சன்னதி. காட்சி தருகிறார். இது பலிபீடத்திற்கு பின்புறம் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. பக்தர்கள் பலிபீடத்தில் இருந்தே சேவிக்கிறார்கள்.

## கட்டிடக்கலை

கோயிலின் ராஜகோபுரமானது உயரம் குறைந்த மொட்டை கோபுரமாக உள்ளது. திராவிட கட்டிடக்கலையில் உயரமான கருங்கற் சுவர்களால் இடைக்கால சோழர்களால் கட்டப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. பின்னர் விஜயநகர அரசர்கள் காலத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது.

வட ஆற்காடு தென்னாற்க்காடு என 12 காடுகள் ஆதி காலத்தில் இப்பகுதியில் இருந்தன. இதில் ஆதி திருவரங்கம் தென் ஆற்காடு முடியும் இடத்திலும் வட ஆற்காடு துவங்கும் இடத்திலும் இருக்கிறது. காடு என்று சொல்லப்பட்ட ஊர்களை இப்போது நாடு என்று கூறுகின்றனர்.

இந்த இரண்டுக்கும் நடுவில் உள்ள பகுதி நடுநாடு. இந்த நடுநாட்டை செழிப்பாக வைத்திருப்பது பெண்ணையாறு. கோவிலின் வடக்கே பெண்ணையாறு செல்வதால் வடபழையாறு பெயர் பெற்றது. திருக்கோவிலூரில் இருந்து ஆதி

திருவரங்கம் வரை கோவிலுக்கு சொந்தமாக ஆதியில் 400 ஏக்கருக்கு மேலிருந்தது. நாளடைவில் குறைந்து விட்டது.

மன்னர்கள் காலத்தில் கோவிலுக்கு எனக் கொடுக்கப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்து அதில் கிடைக்கும் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு தானியத்தைக் கோவிலுக்கு வரியாக கொடுக்க வேண்டும்! அப்படி கிடைக்கும் தானியங்களை சேமித்து வைப்பதற்காக மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டதுதான் களஞ்சியம்.

இத்தலத்து ராஜகோபுரத்துக்குரிய கோபுரத்துக்கு அருகில் தென்கிழக்கு மூலையில் தானிய சேமிப்பு களஞ்சியம் உள்ளது. இதுபோல் தானிய சேமிப்பு களஞ்சியம் திருவரங்கம், திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் கோவில், பாபநாசம் பால்வனநாதர் கோவில்களில் உள்ளன.

இத்தலத்தில் உள்ள களஞ்சியம் கருவறையின் விமானம் போல் தோற்றமளிக்கும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு தானியங்கள் சேமித்து வைக்கப்பட்டன. கீழ்ப்பாகம் நெல்லும், நடுப்பாகம் கம்பும், மேல்பாகம் கேழ்வரகும் சேமித்து வைக்கப்பட்டன. வறட்சிக் காலங்களில் சேமித்து வைத்ததிலிருந்து மக்களுக்கு வழங்கப்பட்டது. கோவிலில் வேலை செய்பவர்களுக்கு தானியங்களைச் சம்பளமாகக் கொடுத்தனர். அன்னதானம் செய்தனர்.

களஞ்சியம் ஒவ்வொன்றிலும் சுமார் 5000 கலம் (ஒரு கலம் என்பது 12 மரக்கால்) ஒரு மரக்கால் — நாலு படி, நாலு கலம் — ஒரு மூட்டை) சேமித்து வைக்கலாம். இந்தக் களஞ்சியம் பராந்தகச் சோழன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறுகின்றனர். தற்போது இது சிதிலமடைந்து காணப்படுகிறது. இதை அரசு முன்வந்து சீர்படுத்த வேண்டும். அதனால் இதை புராதனச் சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம்!

## பாசுரங்கள்

இத்தலத்தை ஆழ்வார்கள் யாரும் மங்களாசாசனம் செய்யவில்லை! ஆனால் திருமங்கையாழ்வார் திருவாய் மொழியில் 'ஒருவாதான்...' எனத் தொடங்கும் பத்து பாசுரங்களிலும் 'ஏழை ஏதவன்...' எனத் தொடங்கும் 10 பாசுரங்களிலும் இத்தலப் பெருமாளை மங்களாசாசனம் செய்துள்ளார் என்பதற்கு கோயில் கல்வெட்டுகளில் சான்றுகள் உள்ளன. வைணவ ஆச்சாரியார் வேதாந்த தேசிகனும் நிபாச திலகத்தில் இப்பெருமாளை மங்களாசாசனம் செய்துள்ளார் என்று நூல்கள் கூறுகின்றன.



சுரதகீர்த்தி என்ற மன்னனுக்கு எல்லா செல்வங்களும் இருந்தாலும், புத்திர பாக்கியம் இல்லாததால் மிகவும் வருந்தினான். நாரதர் அறிவுரையின் பேரில் இவன் தலத்திற்கு தனது மனைவியுடன் வந்து வேண்ட, பெருமாளின் அருளால் நான்கு குமாரர்களைப் பெற்று மகிழ்ந்தனர் தம்பதியர்.

## திருவிழாக்கள்

சித்திரை — வசந்தகால உற்சவம் பத்து நாட்கள், வைகாசி — வைகாசி விசாகம், ஆணி — ஆணித் திருமஞ்சனம் ஆடி — பெண்ணையாற்றில் ஆடிப்பெருக்கு, ஆவணி — கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி — நவராத்திரி, ஐப்பசி — தீபாவளி, கார்த்திகை — கார்த்திகை தீபம், மார்கழி — திருப்பாவை, பரமபத வாசல் திறப்பு

மாசி — கெடிலம் ஆறு ஆரம்ப இடமான 30 கி.மீ. தூரத்தில் உள்ள மையனூர் கிராமத்திற்கு சென்று கருட தீர்த்தம் கொண்டு வந்து உற்சவருக்கு அபிஷேகம், வீதி உலா, பங்குனி — பிரம்மோற்சவம் நடைபெறும்

நேர்த்திக்கடன்

கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்க இங்கு வந்து பிரார்த்தனை செய்து பெருமாளுக்கும் தாயாருக்கும் திருமஞ்சனம் செய்து அர்ச்சனை செய்கிறார்கள்.

நைவேத்தியம்

தினமும் ஆறு கால பூஜை செய்யப்படுகிறது.

நைவேத்தியமாக சுத்த அன்னம் படைக்கப்படுகிறது. உபயதாரர்கள் ஆதரவுடன் ஆகம விதிப்படி பூஜைகள் நடைபெறுகிறது. கோவில் காலை 6 முதல் 7.30 வரை திறந்திருக்கும்.

## இருப்பிடம்

திருவண்ணாமலை மணலூர்ப்பேட்டை வழியில் 33 கி.மீ. தூரத்திலும், திருக்கோவிலூர் மணலூர்ப்பேட்டை வழியே 20 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)

# புத்தக விமர்சனம்

## என்றும் எம்.ஜி.ஆர்
### (வாழ்வியல்)




**ஆசிரியர்:**

**புவனகிரி செயபாலன்**

**விலை : ரூ. 200**

**வெளியீடு:**

**விஜய் பதிப்பகம்,**
**7/18. பாளையக்காரத் தெரு,**
**புவனகிரி –608601**

**எம்**.ஜி.ஆரை தன் பள்ளிப் பருவக் காலத்தில் வெள்ளாற்றைக் கடந்து சிதம்பரம் சென்று பார்த்து வந்ததை ஒரு சுவாரசியமான நாவல் படிப்பது போல் தன்னுடைய ஆசிரியர்களிடம் கூறிய இவரே, பின்னாளில் பள்ளி ஆசிரியராக மாறி, எம்.ஜி.ஆர் குறித்த நூல் வடிவில் கொண்டு வந்திருப்பதே ஒரு தனிக்கதை! எம்.ஜி.ஆரைப் பற்றி எழுத வேண்டும் என்றால் அவரைச் சந்தித்த கோடிக்கணக்கான ரசிகர்களுக்கும் தொண்டர்களுக்கும் அவர் பற்றிய ஒரு கதை இருக்கும்! அவர்களை நூல் வடிவமாக்க வேண்டும் என்ற என்ற சிந்தனையுடன், ‘என்றும் எம்.ஜி.ஆர்’ என்ற ஒரு தலைப்பையே கொடுத்து, ‘என்றென்றும் இருக்கக்கூடியவர் எம்.ஜி.ஆர்’ என்பதனை நிலைநாட்டக் கூடிய விதமாக எழுதியிருப்பது இப்புத்தகத்தின் சிறப்பம்சம்!

எம்.ஜி.ஆர் என்ற ஒரு தனி மனிதர் தன்னுடைய கடைக்கோடி தொண்டனை, ரசிகனை எப்படி கவர்ந்திழுத்து அவர்களின் வாழ்க்கையிலும் ஒரு மாற்றங்களை ஏற்படுத்தினார் என்பதனையும், இன்றைய நடிகர்களும் அரசியல் தலைவர்களும் எம்.ஜி.ஆர் என்ற ஆளுமையிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம் இருக்கிறது என்பதனையும் நூலாசிரியர் சொல்லாமல் சொல்லிச் செல்கிற பாங்கு இந்நூலின் சிறப்பையும் மதிப்பையும் பன்மடங்கு உயர்த்துகிறது!

சிறுகதை



# நேர்த்திக்கடன்

## ஜெகன்

அர்ச்சனா வாசலில் செருப்பை கழற்றி விட்டு வீட்டிற்குள் நுழைந்தாள். மணி சரியாக இரவு எட்டு பத்து. அர்ச்சனாவின் பதினோரு வயது மகன் நகுல், கணவன் நிரஞ்சன் மற்றும் மாமியார் ஹாலில் அமர்ந்திருந்தனர். நிரஞ்சன் போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.

"உஷ்.. அப்பாடா.." என்று சோபாவில் அமர்ந்தவளைப் பார்த்து "என்ன டிபன் செய்யப் போற?" என்றான் நகுல்.

"இரு ஏதாவது செய்யறேன்" என்றவளிடம் "ஏதாவது டேஸ்டா செய்" என்றான் சத்தமாக.

"நான் தான் வெங்காயம் தக்காளி எல்லாம் ஏற்கனவே வெட்டி வச்சிட்டேனே. குருமா வைக்க உனக்கு எவ்வளவு நேரம் ஆகப் போகுது? பிரிட்ஜில இருந்து மாவை எடுத்து டக்குன்னு தோசை சுட வேண்டியது தானேஞ் பாவம் புள்ள, எவ்வளவு நேரம் தான் பசியோட இருப்பான்" என்ற மாமியாரிடம் ஒன்றும் கூறாமல் சமையலறைக்குள் சென்றாள்.

"எனக்கு சப்பாத்தி தான் வேண்டும்ஞ் இல்லன்னா பரோட்டா வாங்கித் தா" என்றான் நகுல்.



"ஒரு நிமிஷம்" என்று போனில் கூறிவிட்டு நிரஞ்சன் அர்ச்சனாவை அழைத்தான். "ஏய்.. அவன் என்ன கேக்குறானோ அதைச் செய். முக்கியமான பிசினஸ் விஷயம் பேசிகிட்டு இருக்கும் போது ஏன் அவன கத்த விடுற?"

"ஏங்க.. இப்ப தானே உள்ளாற வந்தேன். ஒரு ஐஞ்சு நிமிஷம் கூட உட்கார விட மாட்டேங்குறான்."

"வாயை மூடிக்கிட்டு கேட்குறத செய்" என்று கூறி விட்டு மீண்டும் போனில் பேச ஆரம்பித்தான்.

இது எப்போதும் நடப்பது தானே என்று நினைத்துக் கொண்டு சப்பாத்திக்கு மாவு பிசைய ஆரம்பித்தாள். முதுகு லேசாக வலிப்பது போல் இருந்தது. வீட்டிற்குச் சென்றவுடன் பாத்ரூம் போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டே வந்தவளுக்கு, இப்போது அது சுத்தமாக மறந்து விட்டது.

அர்ச்சனா எம்.காம் முடித்து விட்டு தேசிய வங்கி ஒன்றில் கணக்காளராக பணி செய்கிறாள். நிரஞ்சன் பி.காம் முடித்து விட்டு வங்கியில் சிறிது காலம் வேலை செய்தான். திருமணத்திற்குப் பின் சுய தொழில் செய்கிறேன் என்று இருந்த வேலையை விட்டு விட்டான். பல வருடங்களாக ஏதாவது முயன்று கொண்டே இருக்கிறான். ஆனால் அவனுக்கு இன்னும்




விடிவு கிடைக்கவில்லை. மொத்த குடும்பமும் அர்ச்சனாவின் வருமானத்தில் தான் ஓடிக் கொண்டிருக்கிறது. இதனால் நிரஞ்சனுக்கு ஏற்படும் தாழ்வு மனப்பான்மையால் அடிக்கடி அர்ச்சனாவிடம் சண்டை போடுவான்.

அர்ச்சனாவின் கிஜிவி கார்டு எப்பொழுதும் நிரஞ் சனிடம் தான் இருக்கும். கணக்கு கேட்டாலோ, இல்லை "இப்ப இந்த செலவு வேண்டாங்க" என்று சொன்னாலோ, பேயாட்டம் ஆடி விடுவான்.

"என்னாடி.. உன் காசுல தான் குடும்பம் ஓடுதுன்னு நினைக்கிறியா? இப்ப நினைச்சாலும் உன்னை வேலைய விட்டு நிறுத்தி பிச்சையெடுக்க வச்சிடுவேன்.. ஜாக்கிரதை" என்பான்.

மாமியாரோ, "நீ கோபப்படாதப்பாஞ் இவளுக்கு எல்லாம் நல்ல புருஷன் கிடைச்சிட்டான் பாரு.. அந்த கொழுப்பு தான்.. உன் தங்கச்சி மாப்பிள்ளை மாதிரி இருந்தா தெரியும்."

"பெண்ணுக்கு முதல் எதிரி இன்னொரு பெண் தான் போலும்" என்று நினைத்துக் கொள்வாள் அர்ச்சனா.

டிபன் வேலையெல்லாம் முடிந்து, பாத்திரங்களைக் கழுவி வைத்துவிட்டு மாடிக்கு செல்ல படி ஏறினாள்.

"இந்தா ஒரு நிமிஷம்!"

"சொல்லுங்க அத்தை"

"நிரஞ்சன் இன்னைக்கு ஜோசியரைப் பாத்துட்டு வந்தான். குலதெய்வ கோவிலுக்குப் போய் முடி எடுத்துட்டு, பொங்கல் வச்சா, அவனுக்கு பிசினஸ் நல்லா வரும்னு சொல்லி இருக்கார். வர்ற இருபத்தி மூணாம் தேதி நாள் நல்லா இருக்காம். நீ அன்னைக்கு லீவு எடுத்திடு"

"சரிங்க அத்தை" என்று கூறி விட்டு மாடிக்கு வந்தாள்.

ரொம்ப நாளாக இந்த




நேர்த்திக்கடன் பாக்கி இருக்கிறது என்று நினைத்துக் கொண்டே படுக்கைக்கு சென்றாள். நகுல், நிரஞ் சனின் மேல் கால் போட்டுக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான்.

படுக்கையில் அமர்ந்து கொண்டு காலண்டரைப் பார்த்தாள். இருபத்தி மூணாம் தேதியை ஏற்கனவே சிவப்பு பேனாவால் வட்டமிட்டிருந்தாள்.


'ஐயையோ.. அன்னைக்கு எனக்கு ரெண்டாவது நாள் ஆச்சே' குழப்பத்துடன் நிரஞ்சனை எழுப்பினாள்.

"என்னங்க.. என்னங்க.. கொஞ்சம் எழுந்திரிங்க.."

"என்னடி.. நான் நிம்மதியா தூங்கினா உனக்கு பொறுக்காதே"

"சாரிங்க.. குலதெய்வ கோவிலுக்குப் போகனும்னு அத்தை சொன்னாங்க.. அதான் அன்னைக்கு எனக்கு ரெண்டாவது நாள் வருது"

"போடி சனியனே.. ஏதாவது நாள் கிழமைன்னா, உடனே உனக்கு வந்துடுமே. எனக்கு நல்லது எதுவும் நடக்காம இருக்கறதுக்கு காரணமே நீ தான்டி. நீ




ஒன்னும் வர வேண்டாம். நாங்களே பாத்துக்கறோம்" என்று கூறி விட்டு படுத்துக் கொண்டான்.

அர்ச்சனாவிற்கு ஆத்திரமும் அழுகையும் தொண்டையை அடைத்தது. கண்ணில் நீர் வழிய கட்டிலின் கீழே படுத்துக் கொண்டாள்.

'என்னை ஒரு வார்த்தை கேட்டு விட்டு நாள் குறித்திருக்கலாமே. இயற்கையாய் என் உடலில் நடக்கும் மாற்றத்திற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்? இதை நானே நினைத்தாலும் கட்டுப்படுத்த முடியாதே' என்று மனதிற்குள் குமுறினாள்.

'சரி, இதை தள்ளிப் போட ஏதோ மாத்திரை இருக்குன்னு, புதுசா வேலைக்கு சேர்ந்த பொண்ணு சொன்னாளே. நாளைக்கு அவ கிட்ட கேப்போம்' என்று நினைத்துக் கொண்டே தூங்கி விட்டாள்.



காலையில் வேலைக்கு கிளம்பிக் கொண்டிருந்தவளைப் பார்த்து, "இதப் பாரு..எங்க குல சாமிக்கு இதெல்லாம் ஆகாது. உனக்கு அன்னைக்கு தான் ஆகும்னா, நீ வர வேண்டாம்" என்றாள் அவளின் மாமியார்.

அர்ச்சனா திரும்பி நிரஞ்சனை முறைத்தாள். அவன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

ஒன்றும் சொல்லாமல் வங்கிக்கு வந்து விட்டாள். உணவு இடைவேளையில், அந்த பெண்ணிடம் மாத்திரையின் விவரம் கேட்டு எழுதிக் கொண்டாள்.

"அக்காஞ் சில சமயம் அது சரியா வேலை செய்யாது. கொஞ்சம் கவனமா இருங்க" என்றாள் அந்தப் பெண்.

வேலை முடிந்து வீட்டிற்கு வரும் வழியில், மருந்துக் கடையில் மாத்திரைகளை வாங்கிக் கொண்டாள்.

வீட்டிற்கு வந்து நிரஞ்சனிடம், "அதை தள்ளிப் போட மாத்திரை இருக்காம். வாங்கிட்டேன்" என்றாள்.

"அது சரி, உனக்கு எதை எப்படி தள்ளி போடணும்னு தெரியாதா என்ன?" என்று நக்கலாக சிரித்தவனைக் கண்டு கொள்ளாமல் சமையலறைக்குள் சென்றாள்.

இருபத்தி மூன்றாம் தேதி காலை அர்ச்சனாவும், அவள் மாமியாரும் பூஜை சாமான்களை காரில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தனர். நகுல் காரில் அமர்ந்து பாட்டு கேட்டுக் கொண்டிருந்தான். நிரஞ்சன் யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தான். எதற்கும் இருக்கட்டுமே என்று இரண்டு நாப்கினை பேப்பரில் சுற்றி பின் சீட்டின் கவருக்குள் வைத்தாள் அர்ச்சனா.

எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு காரில் ஏறி அமர்ந்தனர். நிரஞ்சன் காரை ஸ்டார்ட் செய்தான்.

"நகுலோட புது டிரஸ் மாடில வச்சிருந்தேன். எடுத்துகிட்டியா..?" என்றான் நிரஞ்சன்.

"சாரிங்க மறந்துட்டேன்."

ஏதோ சொல்ல வந்தவனை சட்டை செய்யாமல், ஓடிச்சென்று வீட்டின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். கிடுகிடுவென்று மாடியேறி நகுலின் டிரெஸ்ஸை எடுத்துக் கொண்டு வேகமாய் இறங்கினாள். வாசலுக்கு அருகில் வரும் போது, தரையில் வழவழப்பாக எதன் மீதோ கால் பட, தடாரென்று ஒரு பக்கமாக விழுந்தாள். தலை கிறுகிறுவென்று சுற்றியது. இடது பக்க இடுப்பில் வலி தாங்காமல், “அம்மா..” என்றாள்.

“என்ன அங்க சத்தம்?” மாமியாரின் குரல் கேட்டது.

சுதாரித்து எழுந்தவள், அவசர அவசரமாக வீட்டை பூட்டிக்கொண்டு காரில் முன் பக்க சீட்டில் ஏறி அமர்ந்தாள்.



நிரஞ்சன் வெடுக்கென்று டிரெஸ்ஸைப் பிடுங்கினான். “அம்மாஞ் நீ இதை வெச்சிக்கோ” என்று மாமியாரிடம் கொடுத்தான்.

மாமியார் அதை வாங்கி பின் சீட்டின் கவருக்குள் வைக்கும்போது, உள்ளே இருந்த நாப்கினைப் பார்த்து விட்டாள்.

“கருமம்.. கருமம்! நிரஞ்சா..இங்க பாரு.. உள்ளே என்ன இருக்குன்னு?”

திரும்பிப் பார்த்த நிரஞ்சன் கோபமாக, “அதைத் தூக்கி வெளிய போடும்மா..” என்றான்.

அர்ச்சனா ஒன்றும் சொல்லாமல் தலையை திருப்பிக் கொண்டாள்.

கோவிலில் பொங்கல் வைத்தாயிற்று. நிரஞ்சன் நகுலை அழைத்துக் கொண்டு மொட்டை அடிக்கும் இடத்திற்குச் சென்றிருந்தான். அர்ச்சனா பொங்கல் பாத்திரத்தை இறக்கி வைக்க முயற்சித்த போது, திடீரென்று அடி வயிறு வலித்தது. காலையில் விழுந்ததிலிருந்தே உடல் வலித்துக் கொண்டே இருந்தது. இரு தொடையிலும் வலி ஆரம்பித்தது.

‘கடவுளேஞ் நேற்று மாலையே இரண்டு மாத்திரைகளை எடுத்துக் கொண்டேனே. என்னைக் காப்பாற்று. என் தவறால் என் பிள்ளையை ஒன்றும் செய்து விடாதே..’ அர்ச்சனாவிற்கு கண்ணில் நீர் திரண்டது.

அதற்குள் நிரஞ்சனும் நகுலும் வந்து விட்டார்கள். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு சாமி சிலை முன் வந்து வைத்தார்கள். அர்ச்சனாவால் நிற்க முடியவில்லை. உடல் நடுங்கிக் கொண்டே இருந்தது. நிமிர்ந்து சாமி சிலையைப் பார்த்தாள். மனதிற்குள் கதறினாள் “என்னால் முடியவில்லை, வேண்டுமானால் என்னைக் கொன்று விடு. என் பிள்ளையை ஒன்றும் செய்து விடாதே”

பூசாரி அழைத்தார், “எல்லாரும் குடும்பமா வாங்க..”

நிரஞ்சனுக்கும், நகுலுக்கும் கழுத்தில் பட்டு துணியைச் சுற்றினார். அர்ச்சனாவிற்கும், அவளது மாமியாருக்கும் பட்டுத் துணியை கையில் கொடுத்தார். கற்பூரத்தை சாமிக்கும் படையலுக்கும் காட்டினார். “உம்..கண்ணுல ஒத்திக்கோங்க..” என்றார்.

“சரி, நீங்க உங்க தட்டை




எடுத்துக்கிட்டு கருவறையைச் சுத்தி வாங்கஞ்”


நிரஞ்சன், நகுல் மற்றும் அர்ச்சனாவின் மாமியார் தட்டுகளை தூக்கிக் கொண்டு வேகமாக முன்னே செல்ல, அர்ச்சனா அடி மேல் அடி வைத்து நடந்தாள்.

கருவறைக்குப் பின்னால் வந்தவள், அழுது கொண்டே சுற்றிலும் பார்த்தாள். யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு, பட்டுத் துணியை நான்காய் மடித்தாள்.

பூஜை எல்லாம் முடிந்து வீட்டிற்கு வரும் போது இரவு பத்து மணியாகி விட்டது. உள்ளே நுழைந்து கற்பூரம் ஏற்றினார்கள்.

“எல்லாரும் பட்டுத் துணிய சாமி படத்துக்கு முன்னாடி வச்சிக் கும்பிடுங்கஞ் ஏய் அர்ச்சனா! உன் துணி எங்கே”” என்ற மாமியாரிடம், “கூட்டத்துல எங்கயோ விழுந்துடிச்சின்னு நினைக்கிறேன்” என்றாள் அர்ச்சனா.

# தினம் தினம் பாடு !



வள்ளுவனும் வாசுகியும்
வாழ்ந்த தென்னாடு! —அவர்
வழங்கிச் சென்ற திருக்குறளை
தினம் தினம் பாடு!


வரியிரண்டில் கருத்துக் கடலை
புகுத்தி வைத்தவர்! —நாம்
வாழும் நெறியை வரிக்குவரி
சொல்லி வைத்தவர்!

ஆயிரத்து முன்னூற்றி
முப்பது குறளை —இந்த
அகிலம் போற்றி பொதுமறையாய்
ஏற்கச் செய்தவர்!

அறம் பொருள் இன்பமெனும்
அழகு முப்பாலை —நம்
அறிவுவரை ஊட்டிச் சென்ற
ஆற்றல் மிக்கவர்!

மூன்றுபாலும் முதன்மையான
வாழ்க்கை வாய்ப்பாடு! —இதை
முழுதும் கற்று உணர்ந்துவிட்டால்
மிளிரும் பண்பாடு!

**இராதை. சே. பிரபாகரன்**




படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com




## ரசிகமணி டி.கே.சி.

**டி.**கே. சிதம்பரநாத முதலியார், ரசிகமணி டி.கே.சி. என அறியப்படும் இவர் ஒரு வழக்கறிஞர், எழுத்தாளர் மற்றும் தமிழ் இலக்கிய திறனாய்வு முன்னோடி ஆவார்.

வாழ்க்கை

திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை தீத்தாரப்ப முதலியார் — மீனாம்பாள் தம்பதியினருக்கு மகனாக செப் 11, 1882 அன்று பிறந்த இவர் தென்காசியில் ஆரம்ப கல்வியும் திருச்சிராப்பள்ளி உயர்நிலைப் பள்ளியில் உயர் கல்வியும் பயின்றார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார். இவரது தாய் மற்றும் இவரது மனைவி பிச்சம்மாளின் பிறந்த ஊரான திருவில்லிபுத்தூர் வடக்கு ரத வீதியில் உள்ள இல்லத்தில் சிறிது காலமும், குற்றாலத்திலும் வாழ்ந்து இருந்தார். 1930 முதல் 1935 வரை சென்னை மாகாண இந்து அறநிலையத்துறை பாதுகாப்பு ஆணையராக பணியாற்றினார்.

### இலக்கியப் பணி

திருநெல்வேலியில் வண்ணார்பேட்டை சாலைத்தெருவில் உள்ள இவரது வீட்டின் நடு முற்றமாக இருந்த (தொட்டிக்கட்டு) வட்ட வடிவமான அமைப்பில் இவரது நண்பர்கள் மாலை வேளையிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூடுவார்கள். இந்தக் கூட்டத்திற்குத் தான் வட்டத்தொட்டி என் பெயர் ஏற்பட்டது. இவரின் வட்டத்தொட்டி இலக்கிய அமைப்பில் மீ. ப. சோமு, பி.ஸ்ரீநிவாச்சாரி, கல்கி, ரா.பி.சேதுப்பிள்ளை, இராசகோபாலாச்சாரி, அ.சீனிவாச ராகவன், தொ.மு.பாஸ்கர தொண்டைமான், ச.வையாபுரிப்பிள்ளை, வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.



1927 ல் சென்னை மாகாணத்தின் சட்டமன்ற மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாநில முதல்வராக இருந்தபோது தமிழக அரசுக்கு ஏற்ற முத்திரைச் சின்னமாக திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம் பரிந்துரை செய்தார்.

தமிழ்க் கவிக் காதலர் டி.கே.சி என்று பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள். சிரீஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள். டி.கே.சி. பிறந்த நாள் என்றும் தமிழர் கொண்டாடும் நாள்." மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மிக மிகக் குறைந்த வார்த்தைகளில், ரத்னச் சுருக்கமாக டி.கே.சி.யின் விஸ்வரூபத்தை நமக்குக் காட்சியாகக் காட்டிவிட்டார்.தமிழ் மொழிக்கும், தமிழ்க் கவிதைக்கும், தமிழின் மறுமலர்ச்சிக்கும், தமிழர் பண்பாட்டிற்கும், தமிழ் இசைக்கும் ரசிகமணி அவர்களால்தான் ஏற்றம் ஏற்பட்டது என்பதும் உண்மை. தமிழ்க் கவிதையை இன்பம் காண்பது எப்படி, கவிதையை அனுபவிப்பது எப்படி, கவிதை மூலம் எப்படி ஆனந்தம் அடையலாம் என்றெல்லாம் தமிழர்களுக்குச் சொல்லிக் கொடுத்தவர் டி.கே.சி.





# பெருமை

தீப. நடராஜன்

ரசிகமணி தமிழ் இலக்கிய உலகில் தோன்றுவதற்கு முன்பு கவிதை என்பது வேறு, செய்யுள் என்பது வேறு என்பதை யாரும் பிரித்துப் பார்த்தது இல்லை. பாடலின் பொருள் நயத்தை மட்டும் விளக்கிக் கொண்டிருந்தனரே அல்லாமல் உட்பொருள் கவி உருவம் பெற்று வெளிவந்துள்ள அற்புதத்தைக் கண்டவர் யாரும் டி.கே.சிக்கு முன்னர் இருந்ததாகத் தெரியவில்லை.


கவிதையை அனுபவித்தவர் மட்டுமல்ல டி.கே.சி. கலையை, இசையை, பண்பாட்டை, வாழ்க்கையை என்று இப்படி எல்லாத் துறைகளிலும் அவர் தனித்துவத்தோடு அனுபவம் பெற்றவர்; விளக்கமளித்து தமிழ் மக்களுக்கு உதவியவர். ரசனை முறைத் திறனாய்வாளர் என்று ரசிகமணியைச் சிலர் சிறப்பித்துக் கூறுவர்.

கலை, இலக்கியம், இசை, வாழ்க்கை முறை எல்லாவற்றிலும் அந்தத் திறனாய்ந்து தெளிவு பெறும் நிலையை டி.கே.சி.யிடம் காண முடியும். பழைய இலக்கியம் என்னும் ஒரே காரணத்திற்காக எல்லாவற்றையும் அவர் ஏற்றுக்கொண்டது கிடையாது. அதே போன்று கவித்துவம் இல்லாத கவிகளையும், அவர் தயவு தாட்சண்யம் இன்றி ஒதுக்கித் தள்ளிவிட்டிருப்பதைப் பார்க்கிறோம்.






டி.கே.சி. அவர்கள் ஏற்றுக்கொண்ட கவிஞர்களுள் ஸ்ரீவில்லிபுத்தூர் கவிஞர்களான பெரியாழ்வார். ஆண்டாள் இருவரும் அடங்குவர். ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் ரசிகமணி டி.கே.சி. அவர்களுக்கும் உள்ள தொடர்புகள், செய்திகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது ஸ்ரீ ஆண்டாள் திருக்கோவிலின் கோபுரம் சம்பந்தமானது. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது தமிழக அரசுக்கு ஏற்ற இளச்சினை ஒன்றை வடிவமைக்கத் திட்டமிட்டனர். பலரும் பல்வேறு



யோசனைகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். முடிவுக்கு வர இயலவில்லை அரசினரால்.

ரசிகமணி டி.கே.சி. அவர்களிடம் ஓமந்தூரார் யோசனை கேட்டார். “இதற்கா இவ்வளவு யோசனை? தமிழ்நாடு முழுவதும் வானளாவிய கோபுரங்கள் எழுந்து நிற்கின்றனவே. அதைவிடவா தமிழ்க் கலையையும், தமிழ்ப் பண்பாட்டையும் எடுத்துக் காட்டும் சின்னம் வேறு இருக்கிறது? நம் ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் மிகவும் அழகான தோற்றத்துடன் இருக்கிறது. அதையே தமிழக அரசின் சின்னமாக வைத்துவிடலாமே” என்று உடனே பதில் சொல்லிவிட்டார் ரசிகமணி.

கல்லூரிக் காலத்திலேயே தமிழ் மேல் பற்றுக்கொண்டு திருக்குறள், பெரியபுராணம், காஞ்சிப் புராணம் உள்ளிட்ட நூல்களைக் கற்று அதுகுறித்து மாணவர்களிடம் எடுத்துரைக்கும் பழக்கத்தையும் டி.கே.சி. வைத்திருந்தார்.



1908—ம் ஆண்டு பிச்சம்மாள் என்பவரைத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார். வழக்கறிஞராகப் பதிவு செய்திருந்தாலும், அப்பணியைத் தொடராமல் தமிழுக்காகவே வாழ்ந்த டி.கே.சி. திருநெல்வேலியில் 1924—ம் ஆண்டு ‘இலக்கியச் சங்கம்’ என்ற அமைப்பைத் தொடங்கினார்.இந்த அமைப்புத்தான் பிற்காலத்தில் ‘வட்டத்தொட்டி’ எனப் பெயர் பெற்றது.

இந்த வட்டத்தொட்டி இலக்கிய அமைப்பு 1924—ல் இருந்து 1927 வரையும், பின்னர் 1935—ல் இருந்து சில ஆண்டுகளும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. இந்த அமைப்புக்கு வெள்ளக்கால் சுப்பிரமணியம்,எஸ்.வையாபுரிப்பிள்ளை, ரா.பி.சேதுப்பிள்ளை, சக்கரபாணி நம்பியார், வித்வான் அருணாசலம், பி.ஸ்ரீ.ஆச்சார்யா, மீ.ப. சோமு, தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ஆ. சீனிவாசராகவன் உள்ளிட்ட அறிஞர்கள் நிரந்தரமாக வரும் பழக்கம் உடையோராக இருந்திருக்கின்றனர்.

ராஜாஜி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, அப்புசாமி, பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் வட்டத்தொட்டிக்கு அவ்வப்போது வந்து கலந்து கொள்வோரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழால் அறிவியல் மட்டுமன்றி அனைத்துக் கலைகளையும், இயல்களையும் கற்க முடியும் என முழக்கமிட்ட டி.கே.சி. தமிழ்க் கவிதையில் மறைந்து கிடந்த கருத்துகளை எல்லாம் வெளிக்கொணர்ந்த காரணத்தால் ‘ரசிகமணி’ என பெயர் சூட்டி அவரைத் தமிழுலகம் பாராட்டியது.

இலக்கியம் கூறுவதை நயம்பட விளக்கும் தன்மையுடைய டி.கே.சி.யால் தமிழின் சுவையை உணர்ந்தவர்கள் ஏராளம். உரைநடை மட்டுமல்லாது, கடிதங்கள் மூலமும் தமிழை உணர வைத்தவர் டி.கே.சி.

கடிதத்தின் வாயிலாக தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழிசை உள்ளிட்டவற்றை வளர்த்தவர் அவர். ‘கடித இலக்கியம்’ என்ற புதிய இலக்கியச் சுவையை அறிமுகப்படுத்தியவர். தமிழை முழுமையாக அனுபவித்த டி.கே.சி. தேவகோட்டையில் 1941—ம் ஆண்டு நடைபெற்ற தமிழிசை மாநாட்டில் தலைமையேற்று தமிழிசையின் மேன்மையை எடுத்துரைத்தார்.

இப்படி அனைத்துக் கலைக்கும் தொண்டாற்றிய டி.கே.சி. 1927—ம் ஆண்டு சென்னை மேல்சபைக்குத்





தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கும் அவர் சங்கத்தமிழ் குறித்து முழக்கமிட்டார். 1930 முதல் 1935 வரை சென்னை மாகாண இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையராகப் பணியாற்றிய அவர், கோயில்களில் தமிழ்நாட்டு பழங்கலைகளை நிகழ்த்தி அக்கலைகளைச் செழிக்கச் செய்தார்.

இதய ஒலி, கம்பர் யார் உள்ளிட்ட அவரின் நூல்களும், முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகிய பதிப்புகளும் டி.கே.சி.யின் சிறப்பைத் தெளிவுபடுத்தும். இவர் நிகழ்த்திய வரவேற்புரை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழறிஞர் உ.வே. சாமிநாத அய்யர் உள்ளிட்ட சான்றோர்களை மிகவும் கவர்ந்தது. தமிழ் இவரிடம் கொஞ்சி விளையாடுவதை அறிந்த மகாகவி பாரதியார் இவரை அடிக்கடி சந்தித்தார்.

இவர் வீட்டில் கூடும் தமிழ் அன்பர்களிடையே, கம்பனின் கவியாற்றலையும் அவர் பெருமைகளையும் இவர் விவரிக்கும் பாங்கு கேட்போரை மெய்மறக்க வைத்தது. வாரம் ஒருமுறை நடைபெறும் இந்த இலக்கிய முற்றம் 'டி.கே.சி. வட்டத்தொட்டி' எனப் பிரபலமடைந்தது. 1926—ல் சென்னை மாகாண சட்டமன்ற மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதையடுத்து இந்து அறநிலையத்துறை ஆணையராகப் பொறுப்பேற்றார். கம்பராமாயணத்தில் ஆழமாக மூழ்கிய இவர், அந்தக் காவியத்தில் சேர்க்கப்பட்டிருந்த ஏராளமான இடைச்செருகல்களை அடையாளம் கண்டார்.

அவற்றை நீக்கி, கடும் எதிர்ப்புக்கிடையே புதிய கம்பராமாயணப் பதிப்பை வெளியிட்டார். காந்தியடிகள் ஒருமுறை சென்னை வந்தபோது ராஜாஜி இவரை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார். கம்பராமாயணத்தின் சில பாடல்களை ராகத்துடன் இவர் பாடக் கேட்ட காந்தியடிகள் இந்தக் காவியத்தை அதன் மூலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றதும் இவரோ 'அதற்கு நீங்கள் தமிழனாகப் பிறக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.




'கம்பனைப் போன்று ஒரு ரசிகன் கிடைப்பதற்கு வள்ளுவர் 700 ஆண்டுகள் காத்திருந்தார். டி.கே.சி.யைப் போன்ற ஒரு ரசிகன் கிடைப்பதற்கு கம்பன் 1000 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது' என ஜஸ்டிஸ் மகாராஜன் இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

இசைக்கச்சேரிகளில் தமிழ்ப்பாடல்கள் இசைக்கப்பட வேண்டியது குறித்து இவர் எழுதிய கட்டுரைகளைப் படித்த செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், 1941—ல் தேவகோட்டையில் நடைபெற்ற இசை மாநாட்டில் இவரது சிறப்புரையை கேட்டு, தமிழ் இசையை பரப்பும் பணியைத் தொடர ரூ.30,000 நிதி கொடுப்பதாகவும் அறிவித்தார்.

இதையடுத்து சென்னையில் தமிழிசை மன்றம் தொடங்கப்பட்டது. எம்.எஸ்.சுப்புலட்சுமி, தண்டபாணி தேசிகர் உள்ளிட்டோர் டி.கே.சி. தலைமையில் தமிழிசை மன்றம் நடத்திய இசை மாநாட்டில் தமிழ்ப் பாடல்களைப் பாடினார்கள். 'வட்டத்தொட்டி நாயகர்', 'வளர்தமிழ் ஆர்வலர்', 'ரசிகமணி', 'குற்றால முனிவர்' என்றெல்லாம் போற்றப்படும் டி.கே.சிதம்பரநாத முதலியார் 1954—ம் ஆண்டு 73—ம் வயதில் மறைந்தார்

புதினம்

# சிவகாமியின்



## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

### அபயப் பிரதானம் 23


"சிவகாமி! மெய்யாகவே நீதானா? அல்லது என் கண்கள் என்னை ஏமாற்றுகின்றனவா?" என்று நாகநந்தியடிகள் போலி அவநம்பிக்கையுடன் கேட்டார்.

"அடிகளே! நான்தான்; அனாதைச் சிவகாமிதான்; இந்த ஏழைச் சிற்பியின் மகளைக் காப்பாற்றுங்கள் சுவாமி!"

"அப்படிச் சொல்லாதே, அம்மா! நீயா அனாதை? நீயா ஏழை? பல்லவ ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி மாமல்லப் பிரபுவின் காதலுக்குரிய பாக்கியசாலியல்லவா நீ? மண்டலாதிபதியான மகேந்திர பல்லவரின் மருமகளாகப் போகிறவளல்லவா?"

"சுவாமி! என்மேல் பழி தீர்த்துக் கொள்ள இது சமயமல்ல! தங்களை ரொம்பவும் வேண்டிக் கொள்கிறேன்; காப்பாற்ற வேண்டும்" என்று சிவகாமி அலறினாள்.

"பெண்ணே! காவித் துணி தரித்த ஏழைப் பரதேசி நான்! என்னால் உன்னை எப்படிக் காப்பாற்ற முடியும்?"




"தங்களால் முடியும், சுவாமி! தங்களால் முடியும்! தாங்கள் மனது வைத்தால் கட்டாயம் காப்பாற்ற முடியும்."

"இவர்களிடம் நீ எப்படிச் சிக்கிக் கொண்டாய்? கோட்டைக்குள்ளிருந்து ஏன் வெளியே வந்தாய்? எப்படி வந்தாய்?"

"அதையெல்லாம் இப்போது கேட்க வேண்டாம், சுவாமி! மூடத்தனத்தினால் வெளியே வந்தேன். என் அருமைத் தந்தைக்கு நானே யமனாக ஆனேன்!... நான் எக்கேடாவது கெட்டுப் போகிறேன்; என் தந்தையைக் காப்பாற்றுங்கள்...."

"உன் தந்தை எங்கே, அம்மா? அவருக்கு என்ன ஆபத்து வந்திருக்கிறது?" என்றார் பிக்ஷு.

"ஐயோ! இவர்களைக் கேளுங்கள்; அப்பா எங்கே என்று இவர்களைக் கேளுங்கள்! சற்று முன்னால் ஏதோ பயங்கரமான வார்த்தை என் காதில் விழுந்தது. அதோ அந்தக் குதிரை மேல் இருப்பவர் சொன்னார். ஆயனர் எங்கே என்று அவரைக் கேளுங்கள் சுவாமி! சீக்கிரம் கேளுங்கள்!"

இப்படிச் சிவகாமி சொல்லிக் கொண்டிருந்தபோதே சற்றுப் பின்னால் குதிரை மேல் வீற்றிருந்தபடி மேற்கூறிய காட்சியைக் கவனித்துக் கொண்டிருந்த தளபதி சசாங்கன் குதிரையைச் செலுத்திக் கொண்டு அவர்கள் அருகில் வந்து சேர்ந்தான்.

"புத்தம் சரணம் கச்சாமி!" என்று நாகநந்தியைப் பார்த்துப் பரிகாசக் குரலில் கூறி வணங்கினான்.

வாதாபிச் சக்கரவர்த்தியிடம் நாகநந்தி பிக்ஷுவுக்கு இருந்த செல்வாக்கைக் குறித்துப் பொறாமை கொண்டவர்களில் தளபதி சசாங்கனும் ஒருவன்.



# சபதம் 23

## கல்கி

“புத்தம் சரணம் கச்சாமி!” என்று நாகநந்தியும் கடுகடுத்த குரலில் கூறினார்.

“ஆ! நாகநந்தி பிக்ஷுவே! திடீரென்று இங்கே எப்படி முளைத்தீர்? நாகம் இத்தனை நாளும் எந்த வளையில் ஒளிந்து கொண்டிருந்தது. இப்போது ஏன் வெளியில் தலையை நீட்டுகிறது?” என்று தளபதி சசாங்கன் கேட்டான்.

கேட்டவர்கள் நடுங்கும்படியான நாகப்பாம்பின் சீறல் சத்தம் அப்போது திடீரென்று கேட்டது.

அதே சமயத்தில் “பாம்பு பாம்பு!” என்று ஒரு கூக்குரல், அதைக்கேட்ட அங்கே கூடியிருந்த வீரர்கள் சிதறி ஓடினார்கள்.

நாகப்பாம்பு ஒன்று சரசரவென்ற சப்தத்துடன் தளபதி சசாங்கன் ஏறியிருந்த குதிரையின் கால்மீதேறி ஊர்ந்து அப்பாலிருந்த புதருக்குள் விரைந்து சென்று மறைந்தது.

“தளபதி! ஜாக்கிரதை! சாதாரணமாய் நாகப்பாம்பு கடிக்காது. ஆனால் கடித்து விட்டால் அதன் விஷம் ரொம்பப் பொல்லாதது!” என்றார் பிக்ஷு.

சசாங்கன் பல்லைக் கடித்துக் கொண்டு, “பிக்ஷு...இந்த அருமையான உண்மையைச் சொன்னதற்காக மிகவும் வந்தனம். எனக்கு அலுவல் அதிகம் இருக்கிறது. தங்களுடன் பேசிக் கொண்டிருக்க இப்போது நேரமில்லை. மன்னிக்க வேண்டும்..... அடே! இந்தப் பெண்ணைப் பிடித்துக் கட்டுங்கள்!” என்று சற்று விலகிப் போய் நின்ற வீரர்களைப் பார்த்துச் சசாங்கன் சொன்னான்.






அதைக் கேட்ட வீரர்கள் சிவகாமியை நெருங்கி வந்தார்கள்.

“தளபதி! தென்னாட்டின் புகழ்பெற்ற நடன கலைவாணியைச் சிறைப் பிடித்தது உம்முடைய அதிர்ஷ்டந்தான். இந்த விசேஷ சம்பவத்தைச் சக்கரவர்த்தியிடம் நான் கூடிய சீக்கிரம் தெரியப் படுத்துகிறேன்...”



“ஓஹோ! அப்படியானால் பிக்ஷுவும் வாதாபியை நோக்கித்தான் பிரயாணம் கிளம்பியிருப்பது போல் தெரிகிறது....”

“ஆம், சசாங்கரே! ஆனால்

சக்கரவர்த்தியிடம் இந்த விசேஷச் செய்தியைத் தெரிவிப்பதற்கு வாதாபி வரையில் நான் போக வேண்டியதில்லை. சற்று முன்னால் இந்தக் காட்டில் இன்னொரு புறத்தில் சக்கரவர்த்தியைப் பார்த்தேன்…"



"பொய்! பொய்! வாதாபிச் சக்கரவர்த்தி இதற்குள் வடபெண்ணை நதியை அடைந்திருப்பார்."

"பொய்யும் மெய்யும் விரைவிலே தெரியும், தளபதி! ஆனால் ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளும். புலி தனக்கு இரையாகக் கொள்ள எண்ணிய மானின் மீது பூனை கண்ணைப் போட்டால் விபரீதம் விளையும், ஞாபகமிருக்கட்டும்!" என்று நாகநந்தி கம்பீரமான குரலில் கூறியபோது, தளபதி சசாங்கனின் வாயிலிருந்து ‘உம்‘, ‘உம்‘ என்ற உறுமல் ஒலியைத் தவிர வேறெதுவும் வரவில்லை.

பின்னர், நாகநந்தி சிவகாமியைப் பார்த்து, "பெண்ணே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். அதன்படி நடந்து கொண்டால் உனக்கு ஒரு அபாயமும் நேராது. இவர்களுடன் தடை சொல்லாமல் போ! நீ நடனக் கலை பயின்றவளாதலால், உன் கால்களில் வேண்டிய பலம் இருக்கும், நடப்பதற்கு நீ அஞ் சமாட்டாயல்லவா?" என்றார்.

இதுவரை சசாங்கனுக்கும் நாகநந்திக்கும் நடந்த சம்பாஷணையைக் கவனித்த வண்ணம் கற்சிலைபோல் அசைவற்று நின்ற சிவகாமி சட்டென்று உணர்வு வரப் பெற்றவளாய், "சுவாமி! என்னைப் பற்றி எனக்கு ஒரு கவலையுமில்லை. இந்தப் பாவியினால் தங்கள் சிநேகிதர் ஆயனர் பெரும் அபாயத்துக்கு உள்ளாகி விட்டார், ஐயோ! அவரைக் காப்பாற்றுங்கள்!" என்று கதறினாள்.




உடனே நாகநந்தி பிக்ஷு, "தளபதி! இந்தப் பெண்ணின் தந்தை எங்கே?" என்று கேட்க,

சசாங்கன் ஒரு கோரச் சிரிப்புச் சிரித்தவண்ணம், "ஆஹா! உங்களுக்கு அது தெரிய வேண்டுமா? சொல்கிறேன். பல்லவ நாட்டிலுள்ள சிற்பிகளையெல்லாம் ஒரு காலையும் ஒரு கையையும் வெட்டிப் போடும்படி சக்கரவர்த்தியின் கட்டளை; இவளுடைய தந்தை பெரிய மகா சிற்பியல்லவா? அதற்காக அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு இரண்டு கையையும் இரண்டு காலையும் வெட்டிப் போடச் சொல்லியிருக்கிறேன்! அதோ தெரியும் அந்தப் பாறைமேல் கொண்டு போய்ச் சுற்றுப் பக்கமெல்லாம் தெரியும்படியாகக் காலையும் கையையும் வெட்டிக் கீழே உருட்டிவிடச் சொல்லியிருக்கிறேன். காஞ்சிக் கோட்டை மதிலிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரிய வேண்டுமென்றுதான் பாறை உச்சிக்குக் கொண்டு போகச் சொன்னேன்" என்றான் சசாங்கன். இவ்விதம் சொல்லிவிட்டு மீண்டும் அவன் பயங்கரமாகச் சிரித்தான்.

சசாங்கன் பேசுகிற வரையில் அவனுடைய முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சிவகாமி அவன் பேசி முடித்ததும், விவரிக்க முடியாத பயங்கரமும் வேதனையும் நிறைந்த கண்களினால் நாகநந்தியைப் பார்த்து, "அடிகளே!" என்று கதறினாள்.

அப்போது நாகநந்தி, "பெண்ணே! என் வார்த்தையில் நம்பிக்கை வை; உன் தந்தையை நான் காப்பாற்றுகிறேன். மன நிம்மதியுடன் நீ இவர்களோடு போ!" என்றார்.

அப்போது சசாங்கன், "பிக்ஷு! வாதாபிச் சக்கரவர்த்தியின் கட்டளைக்குக் குறுக்கே நிற்பவருக்கு என்ன தண்டனை தெரியுமல்லவா? அது தங்களுக்கும் ஞாபகம் இருக்கட்டும்!" என்று கூறி விட்டுச் சிவகாமியைப் பார்த்து, "பெண்ணே! இந்தப் பிக்ஷு உனக்குச் சொன்ன புத்திமதி நல்ல புத்திமதிதான். அதன் பிரகாரம் தடை ஒன்றும் சொல்லாமல் எங்களுடன் வந்து விடு!" என்றான்.

(சபதம் தொடரும்)

# கேளாயோ எம்பாவாய் !

யாதுமாகி நின்றாயாமே காளி
எப்பொழுது எங்களுடன் வந்து
நின்றிருக்கிறாய் நீ.
நீ கைவிட்டதைப்போல
நாங்கள் உன்னை கைவிடுவதில்லை!

வா பாலத்திற்கு அடியில்
ஒண்டி குடித்தனத்தில் கலந்திடு
அடைமழை, பெருமழை
சாரல் மழை யாவற்றிலும்
தலையில் உரசாக்கு கொங்காணி
போட்டுக்கொண்டு விடிய விடிய
ஈரத்தில் ஊறி உறக்கமற்று
நடுங்கிக்கொண்டே நிற்கலாம்.

'வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்'
சொல்லும் ஊருக்குள்
வீதிக்கு ரெண்டு பொக்லைன் இருக்கிறது.
பொக்லைன் உறுமல் கேளாயோ எம்பாவாய்!

**சதிஷ் குமரன்**





# யோக

## யோகாவின் வழிமுறைகள்

யோகா என்ற சொல் வடமொழி சொல்லான யுஜ் என்பதிலிருந்து வந்தது. இதன் அர்த்தம் இணைப்பது, சேர்ப்பது, பிணைப்பது, அதாவது ஒருவரின் கவனத்தை ஒருமுகப்படுத்துவது. இதற்கு சங்கமம் என்ற பொருளும் ஒன்று கலத்தல் என்ற பொருளும் உண்டு.

4500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் தோன்றிய உடற்பயிற்சி தான் யோகக் கலை அல்லது யோகாசனம் ஆகும். யோகாசனம் என்பது பழகாலத்தில் வாழ்ந்த யோகிகள் காட்டில் மிருகங்கள், பறைவகள் இவைகளின் செயல்களை பார்த்து வடிவமைத்தார்கள் என்று பல தகவல்கள் இருந்தாலும் . இந்த அரிய பொக்கிஷத்தை முதன் முதலில் உலகுக்கு எழுத்து வடிவில் அளித்தவர் பதஞ்சலி முனிவர் தான். இவரது நூலில் அத்தனையும் எழுத்து மூலமாகவே இருந்தது ஆனால் அதற்கு பிறகு வந்த நூல்கள் செய்முறைகள் படங்களோடு நமக்கு கொடுத்து உள்ளது.


உடல், மனம், உணர்ச்சிகள், ஆன்மா ஆகியவற்றை ஒன்றிணைப்பது அல்லது ஒருமுகப்படுத்துவதே யோகக் கலை. உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, மன அழுத்தங்களை குறைத்து அமைதி தருவது. இலக்கின்றி அலையும் மானுட வாழ்வில் இலக்கை நிர்ணயித்து சேர வேண்டிய இலக்கில் கொண்டு போய்ச் சேர்க்க யோகா ஒரு சிறந்த கருவியாகும்.

## எதற்காக யோகா ?



இன்றைய நாகரீக மனிதன் ஆக்ரோசம் மிகுந்தவனாக மாறிவிட்டான். மனிதன் தன் அகச் செயல்களுக்கும் புறச்செயல்களுக்கும் இடையே இருந்த நல்லுறவை இழந்துவிட்டான்.அந்த நல்லுறவு மனிதனின் மகிழ்ச்சிகரமான வாழ்கைக்குத் தேவை என்பதனை மறந்துவிட்டனர்.

மிக அதிகமான ரசாயன மருந்துகளையும்,நச்சுப் பொருள் கலந்த உணவுகளையும் பயன்படுத்தி இயற்கையின் விதிகளுக்கு முரணாகதன் உடலை பாழ்படுத்திக் கொண்டிருக்கிறான். உணர்ச்சிகளையும் ரீ கிளர்ச்சியினையும் தூண்டி விடும் இசையினைரசித்து செயற்கையான, மனிதத்தன்மையில் இருந்து விலகிச் சென்று




கொண்டிருக்கின்றான் தவறான இயற்கை முரன்பாடுகளுக்கு எதிராக நடந்து தன் உடல் வளர்ச்சி பாதிக்கபட்டு மனமும் உடலும் பாதிப்பிற்குள்ளாகிறது. இதனை நாம் இன்று கண்



# யாகம்

கூடாக காண்கின்றோம், உணருகின்றோம்.மனிதன் சிந்தனையாலும்,செயலாலும் மெல்ல செயலாலும ஒரு உயிருள்ள இயந்திரமாக மாறிக் கொண்டு வருகிறான். இரும்பு நுரையீரல்கள், ப்ளாஸ்டிக் இதயங்கள் என்று நவீன விஞ்ஞானத்தின் அடிமையாகிக் கொண்டு வருகிற அவன், அவற்றின் தயவில் தன் வாழ்நாளில் இரண்டு மூன்று வருடங்களை நீட்டித்துக் கொண்டு வாழ்கிறான். ஆனால் எந்த நவீன விஞ்ஞான கருவிகளின் துனையின்றி நோயின்றி மகிழ்வுடன் மனிதனுக்கு யோகா தேவைபடுகிறது.

யோகாசனங்களை வெறும் வயிற்றோடு தான் செய்ய வேண்டும் மேலும் திறந்தவெளியில் சுத்தமான காற்றை சுவாசிக்க கூடிய வகையிலும் அமைதியான இடத்திலேயே யோகாசனங்களை செய்ய வேண்டும்.


## ஸிந்துஜா

### ஏன் யோகாசனம் செய்யவேண்டும்

யோகா செய்வதன் மூலம் அதிகப்படியான உடல் எடையை குறைக்கலாம். இதனால் உடல் தோற்றம் மற்றும் கட்டமைப்பு செ ய் ய ப் ப ட் டு நேர்த்தியான உடல் அமைப்பு உருவாகும் தினமும் யோகா செய்வதால் உடல் மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் அளிக்கும் பலன்கள் ஏராளம். மன அழுத்தம் இருப்பவர்கள்






யோகா செய்வதன் மூலம் அவர்களின் மூளையில் இருக்கும் அமினோ முற்றிக் ரசாயனம் அதிகரிக்கிறது. இதனால் மன அழுத்தம் குறைந்து மனம் நம் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது.

### யோகவின் பயன்கள்


அதிக வேலைப் பளு மற்றும் மன அழுத்தம் காரணமாக ஏற்படும் தொந்தரவுகள் என அனைத்திற்கும் யோகா ஒரு சிறந்த தேர்வு. யோகா வலி நிவாரணி ஆகும். உடல் வலி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு யோக முறையும் உள்ளது. மருந்து மாத்திரைகளால் பக்கவிளைவுகள் ஏற்படலாம். ஆனால் சிறந்த வலி நிவாரணியான யோகா எந்த பக்க விளைவுகளும் இல்லாமல் வெளிப் படுத்தப்படுகிறது.

தினமும் யோகா செய்வதால் உடலின் உறுப்புகள் பலமடைகின்றன. அதனால் உடல் முழுவதும் புத்துணர்ச்சி பெறுகிறது. ரத்தக் குழாய்களில் அடைப்பை சரிசெய்து உடல் ரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. இதனால் நல்ல சிந்தனை கொண்ட மனம்,


அலை பாய்வது கட்டுப்படுத்தி மனதை அமைதிப்படுத்துகிறது.


யோகா செய்வதால் நோய்கள் வராமல் தடுப்பதோடு வந்த நோய்களின் தீவிரத்தை குறைத்து கட்டுக்குள் கொண்டுவரும். யோகா செய்யும் போது மனம் எப்போதும் அமைதியாக இருக்கும். மேலும் மனதளவில் ஏற்படுகின்ற வெறுப்பு கோபம் பயம் போன்ற எண்ணங்கள் நீங்கி உடலும் முகமும் என்றும் இளமையுடன் பிரகாசமாகும். மூச்சுப் பயிற்சி செய்வதால் சுவாசக்கோளாறு பிரச்சனைகளை சரிசெய்யப்படுகிறது. சுத்தமான காற்று மூளையைச் சென்றடையும்போது, மூளை புத்துணர்ச்சி பெறும். இதனால் உடல் ஆரோக்கியம் பலமாகிறது.

வேறு எந்த விஷயத்தையும் யோசிக்காமல் யோகா செய்தால்தான் முழுப்பலனையும் பெற முடிகிறது. கடினமான வேலை செய்தவுடன் யோகா செய்தால் மனதுக்கும் உடலுக்கும் நிறைவு தரும். அன்றாடம் 15— லிருந்து 25 நிமிடங்கள் செலவழித்தால் போதுமானது. அதனால் நாம் அடையும் பலன்கள் ஏராளம். யோகாவை தொடர்ந்து செய்யும்போது உடலில் ஏற்படும் மாற்றங்களை அறிய முடியும். தலை முதல் கால் வரை அனைத்து பகுதிகளும் யோகாவை தொடர்ந்து செய்வதால் வளு பெறும். ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமையான யோகாவின்










சிறப்பு ஏராளம் என்றே கூறலாம்.

யோகக் கலை அல்லது யோகா என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும், சமன்பாட்டிற்கும் உதவிடும் கலை ஆகும். யோகா என்னும் கலை வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழும் கலை ஆகும். அதை உங்கள் வாழ்வில் கடைப்பிடித்தால் பல கொடிய நோய்களில் இருந்து விலகி இருக்க முடியும். அதேபோல் மாரடைப்பு, சர்க்கரை நோய் ஆகியவற்றில் இருந்தும் நிவாரணம் கிடைக்கும். அதன்படி உங்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க தொடர்ந்து யோகா செய்யலாம்.

யோகா செய்வதால் நீங்கள் பெறக்கூடிய ஐந்து பெரிய நன்மைகள் என்ன என்பதை பார்ப்போம்.

1. மனம் அமைதியாக இருக்கும்.

தினமும் யோகா செய்தால், மனதை அமைதியாக இருக்கும். அதாவது, இதன் மூலம் மனதளவில் முழுமையாக ஆரோக்கியமாக இருக்க முடியும். யோகா செய்வது நல்ல உறக்கத்திற்கு வழிவகுக்கும், இதனால் உங்கள் மனம் அமைதியாக இருக்கும். ஜிம் அல்லது உடற்பயிற்சி செய்வதன் மூலம், நீங்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க முடியும், அதே நேரத்தில் யோகா செய்வது உங்களுக்கு மன அமைதியைத் தரும்.

2. யோகா பெரிய நோய்களை எதிர்த்துப் போராடும் சக்தியைத் தருகிறது

யோகா செய்வதன் மூலம் பல பெரிய நோய்களை எதிர்த்துப் போராடலாம். உண்மையில், இது உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துகிறது, இது பல பெரிய நோய்களுக்கு எதிராக போராடும் திறனை வழங்குகிறது. எனவே தினமும் செய்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.




3. சுறுசுறுப்பாக இருக்கும்

யோகா செய்வதன் மூலம் புத்துணர்ச்சி அடைவீர்கள். இதை தினமும் செய்து வந்தால் சோம்பலும் நீங்கும். அத்தகைய சூழ்நிலையில், நீங்கள் அதை ஒரு பழக்கமாக மாற்றிக்கொள்ளலாம். ஏனென்றால் அது ஒன்றல்ல பல பெரிய பலன்களைத் தருகிறது.

4. உடல் நெகிழ்வாக மாறும்

யோகா செய்வதால் உடல் நெகிழ்வாகும். உண்மையில், நீங்கள் ஒவ்வொரு நாளும் யோகா செய்யும் போது, அது உங்கள் முழு உடலையும் வளைக்கும். இது உங்கள் உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது. உங்கள் உடல் கட்டுக்கோப்பாக இருப்பதற்கு இதுவே காரணம்.

5. பிட்டாக இருப்பீர்கள்

உடல் பருமன், உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற நோய்களைத் தவிர்க்க வேண்டுமானால், கண்டிப்பாக தினமும் யோகாசனம் செய்வதை உங்கள் அன்றாட வழக்கத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள். இது உங்களை பிட்டாக வைத்திருக்கிறது.




## கல்லீரலைக் காத்து, கண்பார்வையை அதிகரிக்குமா ‘கொடுப்பை’..

தலைப்பை பார்த்தவுடன் கல்லீரலுக்கும், கண் பார்வைக்கும் என்ன தொடர்பு என்ற ஐயப்பாடு பலருக்கு தோன்றும். ஆக அதனைப்பற்றி தெரிந்துகொள்வது அவசியம். இன்று இளைய தலைமுறையினர் மிகவும் வித்தியாசமான, முரண்பாடான வாழ்வியல் முறையைப் பழகி, ஆரோக்கியத்தை இழப்பது வெளிப்படை. தூக்கமின்மை, இரவில் அதிகம் கண் விழித்தல், மது அருந்துதல் போன்ற ஆரோக்கிய சீர்கேட்டை உண்டாக்கும் பழக்கங்ககளால் கண்களில் இரத்தக்களரியை அனுபவிப்பவர்கள் இன்றைய வாழ்வியலில் அதிகம்.

நவீன வாழ்வியலில் மாறிவிட்ட உணவு பழக்கவழக்கத்தால் முதலில் பாதிக்கப்படுவது சீரண உறுப்புகள் தான். அதிலும் முக்கியமாக, சீரணத்தைத் தூண்டும் மிகப்பெரிய சுரப்பியான கல்லீரல் சார்ந்த உபாதைகள் இன்றைய நாளில் அதிகம். குடிப்பழக்கம் இல்லாதவருக்கும் உண்டாகும் என்.ஏ,எப்.எல்.டி எனப்படும் கல்லீரல் கொழுப்பு நிலையானது இன்சுலின் தடை, சர்க்கரை வியாதி, ரத்தத்தில் அதிக கொழுப்பு போன்ற பல நோய்நிலைகளுடன் தொடர்புடையது.

இன்று அதிகரித்து விட்ட துரித உணவு முறைகளால் பாதிக்கப்படுவது சீரண உறுப்புகள் மட்டுமல்ல, கண்களும் தான் என்கிறது நவீன அறிவியல். இதை பல ஆண்டுகளுக்கு முன்னரே சித்த மருத்துவம் கூறியிருப்பது சிறப்பு.



நம் உணவு பழக்கவழக்கம் கண் பார்வையோடு அதிக தொடர்புடையது என்பது பலருக்கு தெரிய வாய்ப்பில்லை. நம் முன்னோர்கள் நளபாகம், பீமபாகம் போன்ற சமையல்கலையை பழகி பின்பற்றி வந்தது சுவைக்காக மட்டுமின்றி, ஆரோக்கியத்திற்கும் தான். ஆனால் இன்றைய தலைமுறையினருக்கு அறுசுவை உணவு என்பதே தெரியாத நிலை உள்ளது.

சித்த மருத்துவக் கூற்றுப்படி நம் உடலில் உள்ள 96 தத்துவங்கள் தான் அனைத்திற்கும் ஆதாரம். இந்த 96 தத்துவங்கள் தனது இயல்பான நிலையில் இருந்து திரிந்து, மாற்று நிலையை அடைவதே நோய்களுக்கு காரணம் என்கிறது நம் பாரம்பரிய மருத்துவம். இந்த மருவிய தத்துவங்களை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதாலேயே ‘மருத்துவம்‘ என்ற பெயர் உண்டாயிற்று என்பதும் வியப்பளிக்கும்.

இத்தகைய 96 தத்துவங்களில் முக்கியமாக உள்ள மூன்று குற்றங்கள் வாதம், பித்தம், கபம் தான். சித்த மருத்துவம் நம் உடலில் உள்ள உறுப்புகளை இம்மூன்றின் சார்பாகவே வகைப்படுத்துகிறது. அந்த வகையில் பித்தத்தின் சார்பாக உள்ள உறுப்புகள் கண்களும், கல்லீரலும் தான். எவ்வாறு உணவு முறைக்கும், கண்களுக்கும் தொடர்பு உண்டு என்று இப்போது புரிய வரும்.






மருத்துவர்

**சோ.தில்லைவாணன்**

அதிகம் பயன்படுத்தும் அலைபேசி மற்றும் மின்னணு சாதனங்கள் இவற்றால் பெரியவர்கள் மட்டுமின்றி பெரும்பாலான குழந்தைகள் இளம் வயதிலேயே கண் பார்வை குறைவு ஏற்பட்டு கண் கூச்சம், கண் எரிச்சல் போன்ற குறிகுணங்களால் அவதியுறுவது இன்றைய கால கட்டத்தில் வருத்தமளிக்கும் ஒன்றாக உள்ளது. இது ஒருபுறமிருக்க, மதுப்பழக்கம், புகைபிடித்தல், சத்தற்ற உணவுகள், துரித உணவுகள், குப்பை உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் இவற்றால் பாதிக்கப்படும் கல்லீரல் செயல்பாடுகள் கண்களையும் பாதிப்பதாக உள்ளது.



காமாலை நோயில் கண்களை பரிசோதித்து பித்தம் அதிகரிப்பதை உணரும் முறையை காலம் காலமாக பழகி வருவது நாம் அறிந்ததே. இது கல்லீரலுக்கும், கண்களுக்கும் உள்ள தொடர்பை உணர்த்துகிறது. கண்களில் ஏற்படும் மாற்றம் காமாலை நோயில் மட்டும் என்பது இல்லை. பெரும்பாலான கல்லீரல் சார்ந்த நோய்நிலைகளில் கண் சார்ந்த பாதிப்புகள் உண்டாவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பஞ்ச பூதங்களில் தீ பூதத்துடன் தொடர்புடைய இரண்டு உறுப்புகளையும் காத்து, வருங்கால சந்ததியின் ஆயுட்காலத்தை நீட்ட வல்லது இயற்கையான சித்த மருத்துவ மூலிகைகள். அந்த வகையில் பித்தத்தைக் குறைத்து கல்லீரலைக் காத்து, கண் பார்வையை அதிகரிக்கும் மூலிகைகளில் முக்கிய இடம் பிடிப்பது ‘கொடுப்பை கீரை’ எனும் ‘பொன்னாங்கண்ணி’.

கொடுப்பை என்பதன் பெயர்காரணத்தை சற்று ஆராய்ந்தால்,




பை என்றால் இளமை அல்லது அழகு என்றும், கொடு என்றால் கொடுக்க வல்லது என்பதாகவும் உள்ளது. அதாவது இளமையும்,அழகையும் கொடுக்க வல்ல கீரை என்று பொருள் விளங்குவது ஆச்சர்யம்.

பொன்னாங்கண்ணி என்பதன் பொருளை ஆராய்ந்தால் பொன்+ஆம்+காண்+நீ=பொன்னாகும் மேனி அதாவது தங்கம் போல் உடலை பளபளப்பாக்கும் என்ற பொருளையும் தருவதாக உள்ளது. இனிப்பு சுவையும் குளிர்ச்சி தன்மையும் உடையது கொடுப்பை கீரை. அதனால் ‘சீதை’ என்ற மற்றொரு பெயரும் உண்டு.அதாவது சீ+தை, சீதளத்தை (குளிர்ச்சியை) தரவல்லது என்பது பொருள் விளங்குகிறது.

பொன்னாங்கண்ணி கண் நோய்களுக்கு மட்டுமின்றி, புண்கள், வெட்டுக்கள் மற்றும்




காயங்களுக்கு சிகிச்சை அளிக்கவும், காய்ச்சல், கண்நோய், வயிற்றுப்போக்கு, தோல் நோய்கள், அசீரணம், மூல நோய், கல்லீரல் மற்றும் மண்ணீரல் நோய்கள் போன்ற நோய்களின் சிகிச்சையில் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

பொன்னாங்கண்ணி கீரையில் வைட்டமின் சி மற்றும் ஈ இயற்கையாகவே உள்ளது. மேலும் இதில் உள்ள கரோட்டீனாய்டு, பாலிபீனால்கள் இதன் மருத்துவ தன்மைக்கு காரணம். இது ரத்தத்தில் சர்க்கரை அளவைக் குறைப்பதாகவும், கொழுப்பின் அளவைக் குறைப்பதாகவும், வயிற்றுப்புழுக்கொல்லியாகவும், கிருமிக்கொல்லியாகவும், வீக்கமுருக்கியாகவும் உள்ளது என நவீன ஆய்வுகள் கூறுகின்றன. மொத்தத்தில் பொன்னாங்கண்ணி கீரை போஷாக்கு நிறைந்ததாக உள்ளது.



பொன்னாங்கண்ணி கீரையை நெய் விட்டு வதக்கி மிளகு, உப்பு சேர்த்து கற்ப முறைப்படி ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள் எடுத்துக்கொள்ள உடலுக்கு அழகினை தரவல்லது. உடலுக்கு குளிர்ச்சியை தந்து, உடலை தேற்றும் தன்மையுடையது. சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்டுள்ள 'பொன்னாங்கண்ணி நெய்' என்னும் சித்த மருந்தினை எடுத்துக்கொண்டாலும் நற்பலன் தரும். 'பொன்னாங்கண்ணி தைலம்' என்ற சித்த மருந்தினை கொண்டு வாரம் இருமுறை எண்ணெய்க்குளியல் எடுத்துக்கொள்வதும் கண்ணிற்கு நற்பலன் தரும்.

புளியாரை நெய், நெல்லிக்காய் தைலம், சிறு சந்தனாதி தைலம் போன்ற பல சித்த மருந்துகளில் பொன்னாங்கண்ணி சேருவது குறிப்பிடத்தக்கது. பொன்னாங்கண்ணி கீரையை பொடித்து சூரணமாக்கி தினசரி 2 முதல் 3 கிராம் வரை எடுத்துக்கொண்டால் கல்லீரலைக் காத்து கண்ணுக்கு குளிர்ச்சி தந்து கண்நோய்கள் வராமல் தடுக்கும். பித்த நோய்களில் இருந்து நம்மை காக்கும்.

பொன்னாங்கண்ணி இலைகளின் சாறோடு, பசு வெண்ணெய் கலந்து, பஞ்சில் நனைத்து கண்களின் மேல் வைத்தால், கண்கள் குளிர்ச்சி அடையும். பொன்னாங்கண்ணி யாருக்கும் எந்தவித பக்கவிளைவையும் ஏற்படுத்தாது. அனைவரும் சாப்பிடலாம்.

நம் முன்னோர்கள் 'உணவே மருந்து' என்ற கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு வாழ்ந்தனர். இன்னும் சொல்லப்போனால் சோற்றுடன் வாழை இலையில் வைக்கும் தீயல், துவையல், வறுவல் போன்ற பதார்த்தங்களை முறையின்றி அமைக்காமல், இன்ன உணவுக்கு இன்ன பதார்த்தம் என்று சமையல் கலையை, ஆரோக்கியத்திற்கான பாதையாக மாற்றி பயன்படுத்தி பயனடைந்தும் வந்தனர்.

தமிழர்களின் உணவில் மட்டுமின்றி கலாச்சாரத்தில் கூட கீரைகளின் பங்கு அளப்பரியது. இன்றைய தலைமுறையினர் அதனை பயன்படுத்த மறந்ததாலோ என்னவோ ஆரோக்கியம் அவர்களுக்கு எட்டாக்கனியாக உள்ளது. ஆக, பொன்னாங்கண்ணி கீரையை மட்டுமின்றி பிற கீரைகளையும் வெறும் உணவுப்பொருளாக பார்க்காமல் ஆரோக்கியம் அளிக்கும் அமிர்தமாக எண்ணி பயன்படுத்த துவங்கினால் நலம் நம்மை நாடி வரும். நோய்கள் நம்மை விட்டு விலகும்.



தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
TAMIL PUTHANDU VAZTHUKAL
மலர்ந்திருக்கு
தமிழ்
சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
வாழ்த்துக்கள்

# தடம் புரியா

## தடம் மாறும் இளைய தலைமுறை!


அண்மையில் ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். விருந்து இரண்டாவது தளத்தில். அங்கு செல்வதற்கு, மின்தூக்கி அருகில் வரிசை நீண்டிருந்தது. பக்கத்திலேயே மாடிப்படிகள். இளம் வயதினர் படிக்கட்டுகளில் ஏறுவதை தவிர்த்துவிட்டு மின்தூக்கிக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் முதியோரும் நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு முறை மின்தூக்கி கீழே வந்ததும் இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். முதியவர்கள் வேறு வழியின்றி படிக்கட்டில் ஏறத் தொடங்கிவிட்டார்கள்.

அவர்கள் ஒவ்வொரு படியிலும் நின்று நின்று சிரமப்பட்டு ஏறுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வாலிப வயதில் இருப்பவர்கள் படிக்கட்டில் ஏறலாம் அல்லவா? துள்ளிக் குதித்து ஓட வேண்டிய பருவத்தில் ஏன் இந்த சுணக்கம்? படி ஏற முடியாதவர்களுக்கு உதவ வேண்டும் என்ற ஒரு சிறு நாகரிகம், பண்பு கூட இன்றைய இளைய தலைமுறைக்கு இல்லையே! பல இடங்களிலும் இப்படிப்பட்டக் காட்சிகளைக் காணலாம்.

பெரிய பெரிய துணிக்கடைகளிலும், அங்காடிகளிலும் மாடியிலிருந்து கீழே செல்ல இளைஞர்கள் மின்தூக்கியைப் பயன்படுத்துகிறார்கள். முதியவர்கள், இரு கைகளிலும் பைகளைத் தூக்கிக் கொண்டு சிரமப்பட்டு படிக்கட்டில் இறங்குகிறார்கள். பேருந்துகளில் ஏறியவுடன் இளைஞர்கள் இடம் பிடித்து அமர்ந்து விடுகிறார்கள். முதியவர்கள், கர்ப்பிணிகள், கைக்குழந்தையோடு நிற்கும் பெண்கள் என எவரையும் பொருட்படுத்துவதில்லை. பெண் பிள்ளைகள் கூட எழுந்து முதியவர்களுக்கு அமர இடம் தருவதில்லை.



அதேபோல, பதிவு செய்யப்பட்ட ரயில் பெட்டியில் சில சமயம் முதியவர்களுக்கு மேல் படுக்கை வந்து விடுகிறது. இளைஞர்களுக்கு கீழே உள்ள படுக்கை கிடைக்கிறது. மேலே ஏற முடியாதவர்கள் இருக்கையை மாற்றிக் கொள்ளலாமா என இளைஞர்களிடம் கேட்கிறார்கள். பெரும்பாலான இளைஞர்கள் மறுத்துவிடுகிறார்கள். சில நேரம், வேறு வழியின்றி முதியவர்கள் தரையில் படுத்துவிடுகிறார்கள். முதியவர்களுக்கு உதவி செய்வதால் அவர்களுக்கு எந்த இழப்பும் ஏற்படப் போவதில்லை. இயலாதவர்களுக்கு உதவி செய்யும் போது கிட்டும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அவர்கள் உணரவில்லை என்பதே உண்மை.



# தலைமுறை

## வெ. இன்சுவை

நகரங்களில் ஷேர் ஆட்டோ இப்போது சர்வ சாதாரணம். சாமானிய மக்கள் இதைத்தான் அதிகம் நம்பியுள்ளார்கள். பத்து பேர் வரை ஏற்றிக் கொள்கிறார்கள். ஓட்டுநர் தன் பக்கத்தில் ஒருவரை அமரவைத்துக்கொள்கிறார் பின்னால் உள்ள இரண்டு நீள் இருக்கைகளில் நான்கு, நான்கு பேராக எட்டு பேர் அதற்கும் பின்னால் உள்ள சிறிய இடத்தில் இரண்டு பிளாஸ்டிக் ஸ்டூலைப் போட்டு இரண்டு பேரை அவற்றில் உட்கார வைக்கின்றனர்.

> “WE HAVE SELF-CENTERED MINDS WHICH GET US INTO PLENTY OF TROUBLE. IF WE DO NOT COME TO UNDERSTAND THE ERROR IN THE WAY WE THINK, OUR SELF-AWARENESS, WHICH IS OUR GREATEST BLESSING, IS ALSO OUR DOWNFALL.”
>
> JOKO BECK

ஒருமுறை எல்லா இருகைகளும் நிரம்பிய பின் ஒரு முதியவர் ஓடி வந்தார் அவருக்கு அந்த ஸ்டூல்தான் இருந்தது. அவர் தயங்கவே, ஆட்டோ ஓட்டுநர் ஓர் இளைஞரிடம், முதியவருக்கு இடம் கொடுத்து, ஸ்டூலுக்கு மாறி உட்காச் சொன்னார் அந்த இளைஞர் மறுத்து விட்டார் “ அந்த முதியவர் பயந்தபடியே ஸ்டூலில் அமர்ந்து பயணம் செய்தார்


இன்றைய இளைஞர்களின் உலகமே நண்பர்களும் கைப்பேசியும் என்றாகி விட்டது. தங்களைச் சுற்றி நடக்கும் எந்த நிகழ்வும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. பெரியவர்களுக்கு எழுந்து இடம் கொடுத்தால் அந்த முதியவர்கள் அவர்களை வாழ்த்துவார்கள். அந்த வாழ்த்தை அவர்களுக்கான “வைப்பு நிதி எனலாம்.

இன்னொரு நிகழ்வையும் குறிப்பிட வேண்டும். அகில இந்திய அளவில் பிரபலமான ஒரு கல்லூரியில் பேசுவதற்காக ஒரு சிறப்பு விருந்தினர் அழைக்கப்பட்டிருந்தார்




நாட்டின் மிக உயரிய பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர் அவர். ஏராளமான புத்தகங்களைக் கரைத்துக் குடித்தவர். பல்வேறு நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவாற்றியவர். அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்ததாக இருக்கும். உரிய தயாரிப்புடன் தான் மேடை ஏறுவார்

மேடையில் அவர் பேசிக் கொண்டிருந்தபோது, மாணவர்கள் அரங்கத்திற்குள் வருவதும், போவதுமாக இருந்தார்கள். உள்ளே அமர்ந்திருந்தவர்களில் சிலர் கைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய ஒருமணி நேரப் பேச்சைக் கேட்டிருந்தால், அது நூறு புத்தக வாசிப்புக்குச் சமமாக இருந்திருக்கும். அது அந்த மாணவர்களுக்குத் தெரியவில்லை. மேடையில் பேசிக்கொண்டிருந்தவருக்கு எப்படி இருந்திருக்கும்? வெறும் வெட்டிப் பேச்சை, கைதட்டி ஆரவாரம் செய்து பழகிப் போனவர்கள்




அம்மாணவர்கள். அவர்களை நல்ல விஷயங்களைக் கேட்க வைக்க நம்மால் முடியவில்லை.

இன்றைய இளைய தலைமுறையிடம் அறிவுத் தேடல் இல்லை என்பதே உண்மை. பாட புத்தகங்களைக் கூட அவர்கள் விரும்புவதில்லை. கடந்த மூன்றாண்டுகளாக கொள்ளை நோய்த்தொற்று காரணமாக படிப்பு, தேர்வு எல்லாம் முக்கியத்துவத்தை இழந்து விட்டன. நூலகம் சென்று புத்தகங்களைப் படிப்பது, குறிப்பெடுத்துக்கொள்வது என்கிற வழக்கமெல்லாம் இன்றைய இளைஞர்கள் அறியாதவை.

எல்லா இளைஞர்களும் இப்படித்தான் என்று கூற முடியாது. இன்றும் சில இளைஞர்கள் கட்டுப்பாடு, தன் முயற்சி, தெளிந்த சிந்தனை, திட நம்பிக்கை, கடின உழைப்பு, இனிய சுபாவம், சமூக அக்கறை ஆகிய நற்பண்களின் உறைவிடமாகத் திகழ்கிறார்கள். இலக்கை நோக்கிய தங்கள் பயணத்தில் இவர்கள் திசை மாறிப் போகமாட்டார்கள். தோல்விகளைக் கண்டு துவண்டு போக மாட்டார்கள். ஒரு சிறந்த ஆளுமையைத் தங்களின் முன்மாதிரியாகக் கொண்டு, தங்களை மேம்படுத்திக் கொள்வார்கள்.



தங்களைச் சுற்றி என்னதான் மாற்றம் நிகழ்ந்தாலும், அவர்கள் தங்களின் லட்சியப் பாதையை விட்டு விலகுவது இல்லை. வழியில் கிட்டும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சிறிய சாதனையிலேயே நிறைவடைந்து விடாமல் தொடர்ந்து முன்னேறி சரித்திரம் படைக்கிறார்கள். ஆனால், வாழ்வில் எந்தக் குறிக்கோளும் இல்லாமலே ஒரு கூட்டம் வாழ்ந்து வருகிறது; வளர்ந்து வருகிறது.

மாணவர்கள் இன்று மதுவுக்கும் போதைக்கும் அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரி விழா, திருமண நிகழ்வு, பிறந்தநாள் கொண்டாட்டம் இங்கெல்லாம் மது விருந்து இருந்தே ஆக வேண்டும் என்பது அவர்களின் நியதி. மற்றொரு கும்பல் போதைப் பொருளுக்கு அடிமையாகிக் கிடக்கிறது. பள்ளிப் பிள்ளைகளையும்கூட இந்த போதை மாத்திரை விற்பவர்கள் விட்டு வைப்பதில்லை.

ஒரு மாணவனின் பெரும்பாலான நேரம் பள்ளியில்தான் கழிகிறது. சமூகத்தைப் பீடித்துள்ள பல தீய பழக்கவழக்கங்களுக்கான விதை மாணவர்களின் பள்ளிப்பருவத்தில்தான் ஊன்றப்படுகிறது. அவர்களின் பெற்றோர்களுக்கு இது தெரிவதில்லை.

திரைப்படம் என்பது ஒரு பொழுதுபோக்கு ஊடகம். அதில் கதாநாயகனாக நடிப்பவர்கள் பெரிய அளவில் ஊதியம் பெற்றுக்கொண்டு நடிக்கிறார்கள். அவர்களை ஆராதிக்கவும் கொண்டாடவும் வேண்டிய அவசியம் என்ன? திரைப்பட ரசிகர்கள் எல்லை மீறி போய்க்கொண்டிருக்கிறார்கள். அரசியல் கட்சிகளின் 'வெறுப்பு அரசியல்' போல இங்கேயும் அதிக துவேஷம் உள்ளது.

அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் போல ரசிகர்கள் அடித்துக் கொள்கிறார்கள். சமூக






வலைதளங்களில் இரு பிரிவினரும் மாறி மாறி கிண்டலான, சில சமயம் மோசமான பதிவுகளைப் போட்டு பகையை வளர்க்கிறார்கள். தங்கள் சொந்தப் பணத்தை செலவு செய்து தங்களுக்குப் பிடித்த நடிகர்களின் புதுப்படத்தை தடபுடலாகக் கொண்டாடுகிறார்கள்.

அந்தக் காலத்திலும் இரு பெரும் நடிகர்களின் ரசிகர்களிடையே போட்டி இருந்தது. ஆனால், இந்த அளவுக்கு மோசமாக இல்லை. இத்தகைய செயல்களுக்கு யார் முற்றுப்புள்ளி வைப்பது? நடிகர்கள்தான் தங்கள் ரசிகர்களைக் கண்டித்து அவர்களை ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட வைக்க வேண்டும். 58 கோடி இளைஞர்களைக் கொண்ட நாடு இது. இளைஞர் சக்தியைச் சரியானபாதையில் திருப்பி விட்டால் இத்தேசம் மேன்மையுறும்.

குழந்தைப் பருவத்திலேயே ஒழுக்கத்தையும், நற்பண்களையும் போதிக்க ஆரம்பித்து விடவேண்டும். பெற்றோரும் ஆசிரியரும்




சமுதாயமும் கை கோக்க வேண்டிய தருணம் இது. பெரியவர்கள் பிள்ளைகளின் மனதில் மனித நேயத்தையும், அறநெறிகளையும் பதிய வைக்க வேண்டும். பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கத் தெரியாத சமூகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். வாசிப்பை நேசிக்காத ஒரு தலைமுறையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

மாணவர்களுக்குப் பாடத்தைவிட பண்பு முக்கியம் என்பதை கல்வியாளர்களும் பாடத்திட்டத்தை வகுப்பவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். முப்பரிமாணத்தில் ஐவகை நிலங்கள், நான்கு பருவங்கள் என மாதிரிகளைச் செய்யச் சொல்வதால் யாருக்கு என்ன பயன்? இதுபோல், காலத்துக்கு ஒவ்வாத, தேவையில்லாதவற்றைச் செய்யச் சொல்வதை ஆசிரியர்கள் நிறுத்த வேண்டும்.

வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்னைகளை, சவால்களை தைரியமாக எதிர்கொள்வது எப்படி என்று மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும், அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.




பள்ளிக் குழந்தைகள் பாடங்களை மனப்பாடம் செய்து, அதிக மதிப்பெண் பெறவேண்டியது முக்கியம்தான். ஆனால், அக்குழந்தைகள் நாளை நல்ல மனிதர்களாக உருவாக வேண்டியது அதைவிட முக்கியம்.

# தமிழ் 2023

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

## JUNE

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

## JULY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## AUGUST

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## SEPTEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## OCTOBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |


## NOVEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |


## DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers